# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள்~08

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2034 ஆவணி -08 25-08-2003 திங்கட்கிழமை ஓசை 188



தொழில் நுட்பத்தில் ஒருமனி
நோத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள

பொற்காலம் வண்ணக் கலையகம்

MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio
மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்,
கணினி முறை வீடியோ மிக்சிங்,
பாடல் பதிவுகள்,
அனைத்திற்கும்

Jaffna Road, Kilinochchi.
யாழ் சாலை, (சி-8437) கிளிநொச்சி.




இடைக்கால நிர்வாகம் தொடர்பாக பாரிசில் நடைபெற்று வரும் ஆலோசனைக் கூட்டம்

# கூட்டு ஏற்படுத்துவதில் காலதாமதம்; சுதந்திரக்கட்சி மீது ஜே.வி.பி. அதிருப்தி!

## கால எல்லை விதிக்கவும் ஜே.வி.பி. முடிவு

(கொழும்பு)

**தேசிய கூட்டமைப்பு ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் தாமதமடைந்து வருவது குறித்து சிறிலங்கா சுதந்திரக்கட்சி மீது ஜே.வி.பி. பலத்த அதிருப்தி கொண்டுள்ளது. இக் கூட்டமைப்பை அமைப்பதற்கான திட்டவட்டமான கால எல்லையை ஜே.வி.பி. முன் வைக்கவுள்ளதாகவும் அது ஏற்கப்படாவிடின் பேச்சுக்களிலிருந்து நீங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.**

நாளை மறுதினம் இக் கூட்டமைப்பை அமைப்பது தொடர்பாகப் பேச்சுக்கள் நடைபெறவுள்ளன. இப் பேச்சுக்களின் போது இவ்விடயம் வலியுறுத்தப்படவுள்ளது. கூட்டமைப்பை அமைப்பதற்கு ஒரு கால எல்லையை நிர்ணயித்து அதற்கு ஏற்றவகையில் பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும் என ஜே.வி.பி. இக் கூட்டத்தில் கோரும். அத்துடன் முக்கியமான இரு விடயங்கள் குறித்துத் திட்டவட்டமான ஒரு முடிவுக்குவர ஜே.வி.பி. வலியுறுத்தவுள்ளது.முதலாவதாக அரசு-புலிகள் கைச்சாத்திட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கை. இரண்டாவது நோர்வேயின் மத்தியஸ்தம். இந்த இரு விடயங்கள் தொடர்பாகவும் நாளை மறுதினம் ஜே.வி.பி வலியுறுத்தும்.சனாதிபதி தலைமை

(08 ஆம் பக்கம் பார்க்க)

## தியாகி லெப்.கேணல் திலீபனுக்கு நல்லூரில் இன்று நினைவுத்தூபி திறப்பு

தியாகி லெப். கேணல் திலீபன் அவர்களின் நினைவுத் தூபி இன்று நல்லூர்ப் பகுதியில் திறந்து வைக்கபடவுள்ளது.மாலை 4 மணியளவில் ஆரம்பமாகவுள்ள இந்த நிகழ்வில் தமிழீழ விடுதலைப்புலிகளின் பல முக்கிய பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

முன்பு இப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த நினைவுத் தூபி சிறிலங்கா இராணுவத்தினரின் சூரியக் கதிர்-1 இராணுவ நடவடிக்கையின் போது அழிக்கப்பட்டிருந்தது. இத்தூபி அமைக்கப்பட்டு மீண்டும் இப்பொழுது திறந்து வைக்கப்படவிருப்பது குறிப்பிடத்தக்கது. (33)

## வடக்கு கிழக்கு மாகாணசபைதேர்தல் நடத்துவது குறித்து அரசு ஆராய்வு

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் தேர்தல் நடத்தும் சாத்தியம் பற்றி அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றது. இதெற்கென மாகாணசபைத் தேர்தல் சட்ட மூலத்தை திருத்துவது தொடர்பாக அமைச்சரவையின் அங்கீகாரம் அடுத்த வாரம் கோரப்பட இருப்பதாக அமைச்சர் அலுவிகார தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் மக்களின் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வது தொடர்பாக தேர்தல் ஆணையாளர் சட்டமா அதிபருடன் கலந்தாலோசித்துள்ளார். இத் தேர்தலுக்கான வேட்பாளர் நியமனப் பத்திரங்கள் தற்போதைக்குக் கோரமுடியாததினால் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட வேண்டுமென்று சட்டமா அதிபர்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## உருவப்படம் இணைப்பு

கேணல் கிட்டுப்பீரங்கிப் படையணியின் முன்னாள் சிறப்புத் தளபதி கேணல் ராயு/குயிலனின் உருவப்படம் இன்றைய ஈழநாதம் நாளேட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது.

### – சமாதான நடவடிக்கைகள் குறித்து

## வெளிநாடுகளில் நம்பிக்கையை ஏற்படுத்த அரசு முயற்சி

(கொழும்பு)

சிறிலங்கா அரசின் சமாதான முயற்சிகள் எதிர்கால நம்பிக்கைகள் குறித்து வெளிநாட்டு அரசாங்கங்களுக்கும் முதலீட்டாளர்களுக்கும் தெளிவுபடுத்தும் பணியில் மலேசியாவுக்கான சிறிலங்கா தூதுவர் றோசி சேனநாயக்க ஈடுபட்டுள்ளார்.

சிறிலங்காவின் தேவையை வெளிநாடுகளுக்கு உணர்த்தி வெளிநாட்டு முதலீட்டை அதிகரித்து சுற்றுலாத்துறையை மேலும் அபிவிருத்தி செய்து பொருளாதார சுபீட்சத்தை ஏற்படுத்துவதே இவரின் முக்கிய பணி என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# ஆறு மாகாண சபைகளுக்கான தேர்தல்களை அடுத்த வருட முற்பகுதியில் நடத்த சனாதிபதி திட்டம்

(கொழும்பு)

ஆறு மாகாண சபைகளுக்கு அடுத்த வருட முற்பகுதியில் தேர்தலை நடத்துவதற்கு சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க திட்டமிட்டுள்ளதாகக் கொழும்பு அரசியல் வட்டாரங்களிலிருந்து வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆறு மாகாண சபைகளுக்கான முதலமைச்சர்களுக்குத் தேர்தல் நடத்துவது குறித்துக் கருத்துக்களைத் தெரிவிக்குமாறு சனாதிபதி கேட்டுள்ளார்.

சனாதிபதி முடிவு செய்தால் மாகாண சபையைக் கலைத்துத் தேர்தலுக்கான நியமனப்பத் திரங்களைக் கோர முதலமைச்சர்களுக்கு அதிகாரம் இருக்கிறது என ஊவா மாகாண சபை முதலமைச்சர் ஏ.எம்.புத்ததாச கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியின் கீழுள்ள மத்திய மாகாண சபையின் ஆயுட் காலம் வரும் ஏப்ரல் மாதத்துடன் முடிவடைகிறது. இதனால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டாலே சபையைக் கலைத்து

(08 ஆம் பக்கம் பார்க்க)

## பொங்குதமிழுக்கு இடையூறு ஏற்படுத்தின் படையினருக்கு எதிராகப் போராட்டம்

### வவு.பொங்குதமிழ் ஏற்பாட்டுக்குழு அறிவிப்பு

வவுனியாவில் மிகுந்த எழுச்சியுடன் இடம்பெறவிருக்கும் பொங்கு தமிழ் நிகழ்வுக்கு சிறிலங்காப் படையினரால் ஏதாவது இடையூறுகள் ஏற்படுத்தப்படுமானால் அவர்களுக்கு எதிராக மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் பரவலாக இடம்பெறும் எனப் பொங்குதமிழ் ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். வவுனியாவில் பொங்குதமிழ் நிகழ்வுக்கான ஆரம்ப வேலைகளில் ஈடுபடுவோர் மீது சிறிலங்காப் படையினர் பல்வேறு வகையான அச்சுறுத்தல்களை விடுத்துவரும் நிலையிலேயே பொங்கு தமிழ் ஏற்பாட்டுக் குழுவினர் இதனைத் தெரிவித்துள்ளனர்.

சிறிலங்காப் படையினரின் இவ்வாறான அச்சுறுத்தல்கள் குறித்து வவுனியா போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் பொங்குதமிழ் ஏற்பாட்டுக் குழுவினர் அண்மையில் முறைப்பாடு செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வவுனியா சிறிலங்கா காவல்துறை புலனாய்வு அதிகாரிகளால் அரச ஊழியர்கள் பொங்குதமிழ் நிகழ்வுக்குக்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரன் பண்டாரவன்னியன் நிகழ்வுகள் இன்று மூன்று இடங்களில் ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

வன்னியின் கடைசி மன்னன் மாவீரன் பண்டாரவன்னியனின் 200 ஆவது ஆண்டு நிறைவு நினைவு நிகழ்வுகள் கற்சிலைமடு, முள்ளிவளை,கிளிநொச்சி ஆகியபகுதிகளில் இன்று நடைபெற ஏற்பாடாகியுள்ளது.இன்று காலை 10 மணிக்கு கற்சிலைமடுவில் அமைந்துள்ள உருவச்சிலையடியில் தமிழீழ தேசியக் கொடியேற்றலுடன் நினைவு நிகழ்வுகள் நடைபெறவுள்ளது.

அதேபோன்று கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் காலை 10 மணிக்கு பண்டாரவன்னியனின் திருவுருவப் படத்திற்கு மலர் வணக்க நிகழ்வுகள், தமிழீழ தேசியக் கொடியேற்றல் என்பன இடம்பெற ஏற்பாடாகியுள்ளது. மாலை முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள சுந்தரலிங்கம் கலையரங்கில் மாலை 7.00 மணிக்கு சிறப்பு நிகழ்வுகள் இடம்பெற ஏற்பாடாகியுள்ளது.

இதேவேளை, கிளிநொச்சி ம.வியில் நடைபெற்று வரும் பண்டாரவன்னியனின் முல்லைத்தீவு படைமுகாமை வெற்றிகொண்ட 200 ஆவது ஆண்டை நினைவு கூரும் வகையில் தமிழீழ போராட்ட வரலாற்றுக் கண்காட்சியினை

(08 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

சிவஞானம் இலட்சுமி என்பவரது தேசிய அடையாள அட்டை இல. 305951684V 07-08-2003 அன்று பளை தடுப்பு முகாமுக்கும் வட்டக்கச்சிக்கும் இடையில் தவறிவிட்டது. தயவு செய்து இதைக் கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். (3659)

### இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

நிழல்படப் பிரதியாக்கல் சேவை குறைந்த கட்டணத்தில் உடனுக்குடன் செய்து வழங்கப்படும். தொடர்புகட்கு: இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கம், கிளிநொச்சி மாவட்டக்கிளை வளாகம், கண்ணன் ஆலய வீதி, கிளிநொச்சி.(சி-8461)

### காணி விற்பனை

வீடு, மலசலகூடத்துடன் 1ஏக்கர் குடியிருப்புக் காணியும் (இல68)1½ ஏக்கர் வயல் காணியும் வட்டக்கச்சியில் விற்பனைக்குண்டு. தொடர்பு திருமுருகன் இரும்பகம் யாழ்சாலை, கிளிநொச்சி. (3654)

### வலம்புரிச் சங்கு கண்டெடுப்பு

பூநகரி பள்ளிக்குடா கடற்பரப்பில் அல்லிராசா விஜி என்பவரால் வலம்புரி சங்கு உயிர்நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. (34)


# இலவச பாடநூல் சீருடைக்கு 1364 மில்லியன் ஒதுக்கீடு

(கொழும்பு)

அடுத்த வருடத்திற்கான இலவச பாடநூல் சீருடைக்கென 1364 மில்லியன் ரூபாவை சிறிலங்கா அரசாங்கம் ஒதுக்கியுள்ளதாக கல்வி அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். இதில் சீருடைக்கு 750 மில்லியன் ரூபாவும், இலவசப் பாடப்புத்தகங்களுக்கு 614 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை வழங்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.

# வட்டக்கச்சி காவல்பணிமனையினரால் கசிப்பு விற்பனை நிலையம் முற்றுகை

(அலுவலக செய்தியாளர்)

வட்டக்கச்சி கல்மடுப் பகுதியில் இயங்கி வந்த கசிப்பு விற்பனை நிலையமொன்றினை முற்றுகையிட்ட வட்டக்கச்சி காவல்துறையினர் அதன் உரிமையாளரைக் கைது செய்ததுடன் விற்பனைக்கென வைக்கப்பட்டிருந்த ஆறு போத்தல் கசிப்பினையும் கைப்பற்றினர்.

நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் வட்டக்கச்சி காவல் துறையினரும் சிறப்புக் காவல் துறையினரும் மேற்படி நடவடிக்கையினை மேற்கொண்டனர்.

தற்போது சந்தேக நபரையும், கைப்பற்றப்பட்ட கசிப்பினையும் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையினைக் காவல்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர். (சோ)

## - கனடா ரொறன்ரோவில் -

# ஆங்கில உச்சரிப்புப் போட்டிகளில் இலங்கை மாணவர்கள் முதலிடம்

கனடாவில் உள்ள ரொறன்ரோ மாகாணத்தைச் சேர்ந்த ஸ்காபரோ பாடசாலை மாணவர்களிடையே நடைபெற்ற ஆங்கில எழுத்துக் கூட்டல் போட்டிகளில் இலங்கைத் தமிழ் மாணவர்கள் முதலாம் இடங்களைப் பெற்றுள்ளனர்.

நூற்றைம்பது மாணவர்கள் பங்குபற்றிய இப்போட்டியில் கனடா, இந்தியா, இலங்கை, சீன மாணவர்கள் இறுதிப் போட்டிகளில் போட்டியிட்டனர். இவர்களில் இலங்கை மாணவர்களே முதலாம் இடத்தைப் பெற்றுள்ளனர்.

கீழ்ப் பிரிவு முதலாமிடம் அஸ்வினா பாஸ்கரன், மத்தியபிரிவு முதலாமிடம் கிருத்திகா விமலகாந்தன், மேற்பிரிவு முதலாமிடம் துலக்சன் ஸ்ரீதரன், இரண்டாமிடம் ஆர்.என். கந்தராசா, மூன்றாமிடம் பிரியங்கா யோகலிங்கம் என்பவர்களே ஆங்கிலப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களாவர்.

# இரு உழவு இயந்திரங்கள் மோதி சாரதி ஒருவர் பலி

மன்னார்-கற்கடந்தகுளம் பகுதியில் இரண்டு உழவு இயந்திரங்கள் நேருக்குநேர் மோதிக்கொண்டதில் ஒருவர் கொல்லப்பட்டார்.

நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் நடைபெற்றது. ஓர் உழவு இயந்திரம் வெளிச்சமில்லாமல் வந்ததாலேயே இவ்விபத்து நடந்ததாகவும் இதனால் அதனை ஓட்டிவந்த சாரதி அந்த இடத்திலேயே கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மற்றைய உழவு இயந்திரத்தின் சாரதியைக் கைதுசெய்த பொலிசார் நேற்று மன்னார்மாவட்ட நீதவான் முன்னிலையில் முற்படுத்தியபோது எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் அநுராதபுரம் சிறைச்சாலையில் வைக்குமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

# வெளிப்படுத்தாத சொத்துக்களை வெளிப்படுத்த மன்னிப்புக்காலம்

## - சிறீலங்கா அரசாங்கம் அறிவிப்பு


வெளிப்படுத்தப்படாத சொத்துக்களை வெளிப்படுத்த அரசாங்கம் வழங்கிய மன்னிப்புக் காலப்பகுதியைப் பயன்படுத்துமாறு அரசாங்கம் கேட்டுள்ளது.

இதற்கு வழங்கிய மன்னிப்புக் காலம் இம்மாதம் 15ஆம் திகதி காலாவதியாகி இருந்தபோதிலும் இப்பொழுது அது இம்மாதம் 31ஆம் திகதி வரையும் நீடிக்கப்பட்டுள்ளது. அமைச்சர் பந்துல குணவர்த்தன ஊடகவியலாளர்களுக்கு இதுபற்றித் தெரிவிக்கையில், இதுவரை 48000 பேர் மன்னிப்பைப் பயன்படுத்தி தமது சொத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார்கள் என்று தெரிவித்துள்ளார். புதிதாக சொத்துக்களைப் பதிவு செய்வோர் அச்சொத்துக்களை எவ்வாறு பெற்றுக்கொண்டார்கள் என்ற விபரங்கள் அவர்களிடம் கோரப்படமாட்டாது. சொத்து வெளிப்படுத்தலிலுள்ள விபரங்கள் அந்தரங்கமாகப் பேணப்படும் என்றும் அவர் தெரிவித்தார். மன்னிப்புக்காலம் முடிவடைந்த பின்னரும் சொத்துக்களை வெளிப்படுத்தாதவர்களுக்கு கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.


# நெஞ்சை விட்டகலாத நினைவலைகள்

முதலாம் ஆண்டு | பதினோராம் ஆண்டு







**திருமதி விஸ்வலிங்கம் கனகாம்பிகை** | **அமரர் குணசிங்கம் விஸ்வலிங்கம்**

12.02.1939 ← மண்ணில் → 22.10.1937

05.09.2002 ← விண்ணில் → 05.12.1992

*நல்லூர் தேர்த் திருநாளன்று எம்மையெல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டுச் சென்று ஆண்டொன்று ஆனதம்மா. ஆறாது எங்கள் மனத்துயரம். மாறாது நீங்கள் விட்டுச் சென்ற பாசம்.*


*எமை வைத்துள் வாழ்வாங்கு வாழ வழி செய்த எம் அன்புத் தெய்வமே! யுகம் யுகமாய் தங்கள் பிள்ளைகளாய்ப் பிறக்க வரம் வேண்டுகிறோம்.*

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நாளை 26.08.2003 செவ்வாய்க்கிழமை நடைபெறும் ஆண்டுக் கிரியைகளில் உற்றார், உறவினர்களைக் கலந்துகொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: மகன் பாபு
இல: 59, பெரியகுளம்,
கண்டாவளை.

# 90ஆம் நாள் நினைவில்



மண்ணில் 1978 07 01 | விண்ணில் 2003 05 28

## கப்டன் தூயநம்பி (அன்பன்)

### (பாலசுப்பிரமணியம் கமலநாதன்)

### - 105/2, முத்துவிநாயகபுரம், முத்துஐயன்கட்டு -

ஓ வீரனே!
விடுதலைத் தேசத்து
வான் பரப்பில்
வெள்ளி நிலவானவனே!
விண்மீன்கள் விழித்திருக்க
நீ மட்டும்
விடைபெற்றுப் போனதெங்கே?
வீழாது வேங்கை என
நினைத்தோடா
தனியாகக் காலன் உனை
தண்ணீரில் அழைத்தான்
காத்திருந்த கருவறையும்
கைகோர்த்து நீ
உலா வந்து உடன் பிறப்புக்களும்
கள்ளமில்லாப் புன்னகையால்
கண்ணிமைக்கும் கணப்பொழுதில் நீ
கவர்ந்திழுத்த உறவுகளும்
கண்ணீரில் கலங்கவிட்டு
விதையாகிப் போனவனே!

விடை பெற்று போனதெங்கே?
மரணம் ஒரு நாள் என்று
மறவர் பணிசெய்ய
மானத்தலைவன் பின்
தளபதியாய்த்தான் சென்றாய்
விளைநிலத்திலேயே
விதையாகிப் போனவனே
ஓ...
மாவீரனே – நீ
மரணிக்கவில்லையடா
விதையாகிப் போனவனே
கண்கள் நீர் சொரிய
இதயங்கள் கதறியழ
கண்ணீரால ஓர் அஞ்சலி
காணிக்கையாய் உனக்கு
சாந்தியடையவே
செலுத்துகின்றோம்.

கப்டன் தூயநம்பியின் (அன்பன்) 90ம் நாள் நினைவு நிகழ்வு (25.08.2003) இன்று அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்விலும் அன்றைய மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு போராளிகள், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(3488) சாந்தி!! சாந்தி!! சாந்தி! சாந்தி!

உன்னை மறவா உறவுகள்

# அமெரிக்க எதிராளிகளை கண்டறிய உளவாளிகளுக்கு பயிற்சியளிக்க ஏற்பாடு!

## – 'வாஷிங்டன் போஸ்ட்' தகவல்

**அமெரிக்கா தலைமையில் ஈராக்கில் நிலைகொண்டுள்ள அதிகாரிகள் அமெரிக்கப் படைகளை எதிர்த்து வரும் நபர்களை அடையாளம் காண்பதற்காக ஈராக்கிய உளவாளிகளுக்கு பயிற்சியளிக்கும் ரகசிய திட்டம் ஒன்றை ஆரம்பத்துள்ளார்கள் என்று வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.**

பெயரைக் குறிப்பிடாமல் அமெரிக்க ஈராக்கிய அதிகாரிகளை மேற்கோள்காட்டி நேற்றைய வாஷிங்டன் போஸ்ட் வெளியிட்டுள்ள செய்தியில் பதவியில் இருந்து கவிழ்க்கப்பட்ட சனாதிபதி சதாம் ஹூசைனின் முகவர்களை இந்தத் திட்டத்தில் சேர்த்துக் கொள்வதற்கான முயற்சி பாக்தாத்தில் ஐக்கிய நாடுகள் தலைமைக் காரியாலயம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் போன்ற சம்பவங்களை அமெரிக்கப் படைகளினால் மாத்திரம் தடுத்து விட முடியாது என்ற அமெரிக்க அதிகாரிகளின் நம்பிக்கை உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

கடந்த இரண்டு வாரங்களாக இந்த ரகசிய திட்டத்திற்கு ஆட்சேர்க்கும் பணிகளை அதிகாரிகள் தீவிரப்படுத்தியுள்ளார்கள் என்று சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

முகாபராத் என்ற உளவு சேவையை அடிப்படையாக வைத்து இந்த ஆட்சேர்ப்பு இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ரயில் மோதல்

(புதுடில்லி)

மேற்கு டில்லியில் நின்று கொண்டிருந்த ரயில் மீது சென்று கொண்டிருந்த ரயில் மோதியதில் 02 பேர் உயிரிழந்துள்ளனர். 21 பேர் காயமடைந்துள்ளனர். இரண்டு எஞ்சின்கள் மோதிய வேகத்தில் தீப்பற்றிக் கொண்டுள்ளன. இதனால்தான் 02 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இஸ்ரேலிய இராணுவ டாங்கி மீது கற்களை எறிந்துவிட்டு ஓடும் பலஸ்தீன சிறுவர்கள்



# வடகொரிய அணுவாயுத சர்ச்சைக்கு பேச்சுக்கள் மூலம் முடிவு கிடைக்கும்

## – சீன வெளிவிவகார அமைச்சர் நம்பிக்கை

(பீஜிங்)

வடகொரிய அணுவாயுத சர்ச்சை தொடர்பாக இடம்பெறவுள்ள ஆறு தரப்பு பேச்சுவார்த்தை வெற்றியளிக்கும் என சீன வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 27ஆம் திகதியில் இருந்து 29ஆம் திகதிவரை நடைபெறவுள்ள ஆறு தரப்பு பேச்சுவார்த்தை தொடர்பாக சீன வெளிவிவகார அமைச்சர் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவலுக்கு கடந்த இரண்டு தினங்களாக விளக்கம் அளித்து வருகின்றார்.

இதேவேளை வடகொரிய அணுவாயுத பிரச்சினையை தீர்க்க சீனா தனது பூரண ஆதரவைப் பெற்றுக் கொடுக்கும் என்றும் அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பீஜிங்கில் நடைபெறவுள்ள ஆறு தரப்பு பேச்சுவார்த்தைகளில் வடகொரியா, தென்கொரியா, அமெரிக்கா, சீனா, ரஷ்யா, ஜப்பான் ஆகிய நாடுகள் பங்குபெறவுள்ளன.

# விமானங்கள் மோதின!

(பேர்லின்)

தெற்கு ஜேர்மன் மாநிலமான ஹபேரியாவுக்கு மேலாக இரண்டு சிறு விமானங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளான போது ஆறு ஜேர்மனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

ஒருவர் மாத்திரம் அமர்ந்து செல்லும் சிறு விமானம் ஒன்றும் ஒரு விமானி மற்றும் நான்கு பிரயாணிகளுடன் சென்ற சிறுவிமானம் ஒன்றுமே மோதிக் கொண்டன.

# கனடாவில் பெரும் காட்டுத்தீ 30,000 பேர் இடம்பெயர்வு

(ரொரன்டோ)

கனடாவின் மேற்கு பகுதியில் காட்டுத்தீ பரவியதால் 30,000 பேர் இடம் பெயர்ந்துள்ளதுடன் 200க்கும் அதிகமான வீடுகள் எரிந்து சாம்பராகியுள்ளன.

ஏக்கனாகன் மலைப் பிரதேசத்தில் இருந்து பரவியுள்ள காட்டுத் தீ மக்கள் குடியிருக்கும் நகரை நோக்கி நிமிடத்திற்கு 100 யார் என்ற வேகத்தில் பரவியிருக்கிறது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தீயில் இருந்து 400 அடி உயரத்திற்கு தீ சுவாலைகள் எழுந்துள்ளதாகவும், கெனோமா நகரில் வசிக்கும் சுமார் மூன்றிலொரு பங்கு மக்கள் தீயினால் அங்கிருந்து வேறு இடங்களுக்கு தப்பிச் சென்றுள்ளார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இம்மாதம் 16ஆம் திகதி மின்னல் காரணமாக இந்த தீ பரவ ஆரம்பித்ததாக தெரிவிக்கப்படுகின்றது.



20 நாட்களாக அமைதியாக இருந்த ஈக்குவடோர் நாட்டின் "டங்கு ரகுவா" எரிமலை 3கி. மீ. உயரத்திற்கு ஆவியை வெளிவிடுகிறது.

# எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை நிறுத்த பாகிஸ்தானை அமெரிக்கா நிர்ப்பந்திக்கவில்லை

## – இந்திய வெளியுறவுத்துறை கண்டனம்

(புதுடில்லி)

எல்லை தாண்டிய பயங்கரவாதத்திற்கு முடிவு கட்டுமாறு அமெரிக்கா போதுமான அளவு பாகிஸ்தானை நிர்ப்பந்திக்கவில்லையென இந்தியா கூறியுள்ளது.

இது சம்பந்தமாக பாகிஸ்தான் மீது அமெரிக்கா நிர்ப்பந்தம் கொண்டு வந்துள்ள போதிலும், அல்-ஹைதா, பயங்கரவாதிகள் குறித்து பாகிஸ்தானை நிர்ப்பந்திக்கும் அளவுக்கு அது இல்லையென்று வெளியுறவுத் துறையமைச்சு வட்டாரங்கள் புதுடில்லியில் கூறியுள்ளன.

சுமார் 500 அல்-ஹைதா தீவிரவாதிகளை அமெரிக்காவிடம் ஒப்படைத்துள்ள பாகிஸ்தான் இரு ஆண்டுகளுக்கு முன்பு இந்தியா வழங்கிய பட்டியலிலுள்ள 20 தீவிரவாதிகளை ஒப்படைப்பது சம்பந்தமாக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லையென்று அவ்வட்டாரங்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

எல்லை தாண்டிய பயங்கரவாதப் பிரச்சினையில் இந்தியா மூன்றாம் நாடுகளைச் சார்ந்திருக்காமல் தொடர்ந்து போராடும் என்றும் வெளியுறவு வட்டாரங்கள் கூறியுள்ளன.

# இரு பிரிவினரிடையே மோதல் ஈராக்கியர் ஒன்பது பேர் பலி

(பாக்தாத்)

ஈராக்கில் நேற்று முன்தினம் இரு பிரிவினருக்கிடையில் ஏற்பட்ட மோதலில் ஒன்பது பேர் கொல்லப்பட்டதுடன் பத்துக்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

ஈராக்கின் கிர்குக் பகுதியிலேயே இந்த மோதல் சம்பவம் நிகழ்ந்துள்ளது. இப்பகுதியில் உள்ள சிறுபான்மை இனத்தவருக்கும் அங்குள்ள அமைப்பு ஒன்றுக்கும் இடையில் இந்த மோதல் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஈராக் யுத்தத்தின் பின்னர் இடம்பெற்ற முதலாவது உள்ளூர் மோதல் சம்பவம் இதுவாகும்.



ஈராக்கின் பஸ்ரா நகரில் பிரிட்டன் இராணுவ ட்ரக் வண்டி ஒன்று குண்டுத் தாக்குதலுக்குள்ளானதையடுத்து பிரிட்டன் தூதரகம் முன்பாக காவல் கடமையில் ஈடுபட்டுள்ள பிரிட்டன் இராணுவ வீரர்.

# மத்திய அரச ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்ய முஸ்தீபு

(புதுடில்லி)

மத்தியரசுப் பணியில் புதிதாக சேர்ந்த ஊழியர்களின் ஓய்வூதியத்திற்காக அவர்களது ஊதியத்திலேயே பணத்தைப் பெற்றுக்கொண்டும் அரசின் முடிவை மீளப்பெறக் கோரி வேலை நிறுத்தம் செய்யப் போவதாக மத்தியரசு ஊழியர்களின் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

மத்தியரசின் இந்த முடிவு ஊழியர்களுக்கு எதிரானது என்று இந்தக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் எஸ்.கே. யாப் கூறியுள்ளார்.

இந்தப் புதிய ஓய்வூதியத் திட்டத்திற்கு சி.ஐ.ரி.யூ. தொழில் சங்கமும் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இந்தப் புதிய திட்டத்தினால் ஓய்வூதியத்திட்டத்தில் கிடைக்கும் சலுகைகள் பறிபோகும். இதுவும் ஒரு வகையிலான ஊதிய வெட்டுத்தான் என்று நேற்று முன்தினம் புதுடில்லியில் வி.ஜ.ரி.யூ. வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு கூறியுள்ளது.



உக்ரேன் நாட்டில் அண்மையில் கண்காட்சிப் போட்டிகளில் வைக்கப்பட்டிருந்த மண்ணாலான பாதம். பல ஓவியர்களும் சிற்பவியலாளர்களும் இதில் பங்குபற்றினர் (160 தொன் மண் பாவிக்கப்பட்டது)

# புஷ் மீண்டும் சனாதிபதியாக 70 வீதமான மக்கள் எதிர்ப்பு

அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ் தேர்தலில் மீண்டும் போட்டியிட்டால் அவருக்கு வாக்களிக்கப் போவதில்லையென்று அந்நாட்டு மக்களில் 70 சதவீதமானவர்கள் கருத்துக் கூறியுள்ளார்கள்.


அமெரிக்காவைச் சேர்ந்த நியூஸ் வீக் சஞ்சிகை அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள சனாதிபதி தேர்தல் தொடர்பாக மக்களிடையே கருத்துக் கணிப்பு நடத்தியது.

ஈராக்கில் அமெரிக்கா தனது படைகளை நிறுத்தி வைத்துள்ளதால் அமெரிக்காவின் பாதுகாப்பு சீர்குலைந்துள்ளதாகவும், இதனால் புஷ்ஷிற்கு மீண்டும் ஆதரவு வழங்கப் போவதில்லையென்றும் 70 சதவீத அமெரிக்கர்கள் கருத்துத் தெரிவித்துள்ளதாக இப்பத்திரிகை கூறியுள்ளது.

# பாதாள உலகத்தவருடன் இணைபிரியா அரசியல் கலாச்சாரம்!

சிறிலங்காவின் தென்பகுதியில் பல சம்பவங்கள் பற்றி ஊடகங்கள் மூலம் இப்போது அடிக்கடி செய்திகள் பரவி வருகின்றன. அதாவது, இராஜித சேனாரட்ண மீது கொலை முயற்சி, மகிந்த ராஜபக்ஷவிற்கு கொலை மிரட்டல், ஜனக பண்டார தென்னக்கோன் நீதிமன்ற அழைப்பை நிராகரித்தல், ரயில்வே ஊழியர், வைத்தியசாலை ஊழியர்களின் வேலை நிறுத்தம் போன்ற செய்திகளோடு எப்போது சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் தொடரும் என்ற செய்தியும் வெளிவந்த வண்ணம் இருக்கின்றன.

அதைவிட நாளை என்ன நடக்கும்?



நடக்காமல் விடும்? என்று மக்கள் அங்கலாய்ப்பதும் புதிய விடயமல்ல. எனினும் அவர்களும் மௌனம் சாதிக்கின்றனர். இப்போது அமைச்சர்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் மறைந்து வாழ இடம் எங்கே இருக்கிறதென்று தேடுவதாகத் தெரிகின்றது. ஏனெனில் மக்களுக்கு சேவையாற்றும் வழிகளிலும் அவர்களை ஏமாற்றும் வழிகளிலும் கூட இப்போது அரசியல் வாதிகளுக்கு அச்சுறுத்தல் காணப்படுகின்றது.

இந்த அரசு அதிகாரத்திற்கு வந்தது பொய் வதந்தியான சமாதானத் திட்டங்களை முன்வைத்தல்ல. யுத்தத்தின் மூலம் சமாதானத்தை ஏற்படுத்தவும் அல்ல. புலிகள் உண்மையாக சமாதானத்தை விரும்பிய படியினாலேயே இந்த சமாதானத்திட்டம் ஆரம்பித்து 18 மாதங்கள் ஆகின்றன. இப்போது பஸ்களிலும், பொது இடங்களிலும் குண்டுகள் வெடிப்பதில்லை. வட பகுதியிலிருந்து இராணுவத்தின் உடல்கள் வருவதில்லை பொருளாதாரமும் 5.5% முன்னேற்றம் அடைந்திருக்கின்றது. எனினும் வேறு வழிகளில் மக்கள் துன்புறுகின்றனர். போக்குவரத்து சேவை, வேலை நிறுத்தம்- வைத்தியசாலை ஊழியர் வேலைநிறுத்தம் இவற்றால் மக்கள் படும் சிரமங்கள் அனேகம். அதுமட்டு மன்றி அண்மைக் காலங்களில் அரசியல்வாதிகளின் படுகொலைகள் இவற்றிற்கெல்லாம் பின்னணி சக்தியாகயிருப்பது எது வென்று மக்கள் சிந்திக்கின்ற நிலைக்குள்ளாகியிருக்கிறார்கள். அவர்கள் சிந்திப்பதிலும் அர்த்தம் உள்ளது. இவற்றுக்கெல்லாம் காரணமாக இருப்பவர்கள் பாதாள உலகக் கோஷ்டியினரே என்பது தற்போது அவர்களுக்கு நன்கு புலப்படுகிறது. சிறிது சிறிதாக வளர்ந்து இப்போது தலையெடுத்தாடுகிறது. எனினும் இதனைக் கட்டுப்படுத்துவதற்கு அரசும் நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை.

இவ்வாறு அதனை மேலும் வளரவிட்டால் எமது நாடும் பனாமா, பிறேசில்,கொலம்பியா, மெக்சிக்கோ போன்ற நாடுகளுக்கேற்பட்ட நிலைக்குத் தள்ளப்படலாம் எனக் கருதினாலும் அது எதிர்க்கட்சிக்கு பயன்படும் காரணமாகிவிடும். எனினும் ஒரு நாடு என்ற வகையில்

கட்சிக்கு பயன்படும் காரணமாகிவிடும். எனினும் ஒரு நாடு என்ற வகையில் அதனை சுட்டிக்காட்ட வேண்டியுமுள்ளது. சிறு அளவில் ஆரம்பித்த இப் பாதாளக் குழுவின் செயற்பாடுகள் காடையர்களில் இருந்து தோன்றியதொன்றே. அவர்களுள்ளும் வேலையற்றோர், இராணுவத்திலிருந்து தப்பி ஓடியோர், அரசியலில் தோல்வி கண்டோர் என்னும் தரப்பினர்களாலேயே உருவாக்கப்பட்ட குழுவாக இருக்கலாம். ஆயினும் தற்போது நீதி வழங்குதல், ஆட்சி நடத்துதல், தண்டனை வழங்குதல் என்பவை யாரால் செயற்படுத்தப்பட வேண்டும் எனத் தீர்மானிப்பவர்களாகவும் அவர்கள் வளர்ந்துள்ளனர்.

இன்று நடைபெறும் மர்மக் கொலைகள் அதிலிருந்து தப்புவது அரசியல்வாதிகளுக்குப் பாதுகாப்பு போன்ற செய்திகளும் வெளிவந்த வண்ணமே இருக்கின்றன. ராஜித சேனாரட்ணாவைக் கொல்ல முயற்சி செய்தமை அரசியல் பின்னணியாகும் எனக் கூறப்படுகிறது. இதற்கு முன்பு பிரபுக்களின் பாதுகாப்பிலும் பாதாளக் குழுவே பங்கு வகிக்கின்றதாகக் கூறப்பட்டது.

இவர்களின் அமைப்புக்கும் பிரபுக்களின் பாதுகாப்புச் சேவையினூடாக இவர்களின் துணையைப் பெற்றவர்கள் கொலைக் கும்பலில் செயற்பாடுகள் பற்றிப் பேசுவது கிடையாது. சுருக்கமாகக் கூறினால் பாதாளக் குழு கலாச்சாரம் அடிப்படை அரசியலில்

> **பாதாள உலகக் குழுக்கள் சிறிது சிறிதாக வளர்ந்து இப்போது தலையெடுத்து ஆடுகின்றன. எனினும் இதனைக் கட்டுப்படுத்துவதற்கு அரசும்நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை என்று 'தினமின' சிங்கள நாளிதழில் ரஹமான் என்ற கட்டுரையாளர் எழுதியுள்ளார்.இது குறித்து இக் கட்டுரையில் ஆராய்கிறார்.**
>
> **- மொழியாக்கம் - வடிவேல்.**

இருந்தே உருவாகியது எனக் கூறலாம். காலத்திற்குக் காலம் தமக்குத் தேவையான சந்தர்ப்பங்களில் இவர்களின் உதவிகளைப் பெறவே அரசியல்வாதிகள் இதனை உருவாக்கியிருக்கிறார்கள். இன்ன குழுவின் நபர் இன்ன அரசியல்வாதியுடனிருக்கின்றார் என்றே பேசப்பட்டு வந்திருக்கிறது. அது வடமேல் மாகாண சபைத் தேர்வின்போது வெளிப்படுத்தப்பட்டும் உள்ளது. இது ஐ.தே.க.ஆட்சிக் காலத்தில் நடந்த மிக மோசமான செயலாகும். ஓர் அரசியல்வாதி முன்னாலேயே தமது கெட்டித்தனத்தைக் காட்டியது இக்குழு. அரசியல்வாதி ஒருவருக்குப் பாதுகாப்பளித்து வெளிப்படையாகத் துப்பாக்கி ஏந்தி வானத்தை நோக்கிச் சுட்டுக்கொண்டு வாகனத்தில் ஏறிச்சென்றது ஒரு குழு.

இதனால் இவர்கள் சட்டத்தின் பிடியில் சிக்காமலும் தப்பிக் கொள்

இதனால் இவர்கள் சட்டத்தின் பிடியில் சிக்காமலும் தப்பிக் கொள்கின்றனர்.பொலிசாரும்சம்பவம் எதுவும் நடந்து முடிந்த பின்னரே அவ்விடத்திற்கு வந்து சேர்கின்றனர். சில தினங்களுக்கு முன்புகூட ராஜித சேனாரட்ணவை அச்சுறுத்திய சம்பவத்தின் பின்னரேயே பொலிசார் விசாரணைக்கு வந்தனர். அமைச்சர் ஒருவருக்கே அந்த நிலை எனில் சாதாரண குடிமகனுக்கு கடவுள் தான் துணை. இதனால் இப்போதும் ஆங்காங்கே கொலைகள் அதிகரித்த வண்ணமே இருக்கின்றன. இக்குற்றவாளிகளை சட்டத்தின் வலைக்குள் மாட்டுவதற்கு இருக்கும் பின்னடைவு காரணமாக மேலும் இவை அதிகரிக்கும்.

இதுவரை எதிர்க்கட்சித் தலைவருக்கும் குறி வைக்கப்பட்டுள்ள தகவலும் வெளியாகியுள்ளது. இந்தப் பாதாளக் குழுவுக்கும் அரசியல்வாதிகளுக்கும் உள்ள தொடர்பு வளர்ச்சி இங்கு காணப்படுகின்றது. நாட்டில் ஏனைய ஒப்பந்தங்கள் போன்று கொலை செய்வதும் இப்போது ஒப்பந்த நடைமுறையாகியிருக்கின்றது.

ராஜித சேனாரட்ண நல்ல சமாதானத்தை விரும்பும் பிரதமரின் கீழ் பணியாற்றும் ஒரு அமைச்சர். அவரும் உண்மையான சமாதானம் நோக்கி செயற்படும் ஒருவர். அவர் தனது அமைச்சின் கீழ் வழங்கப்பட்ட காணிகளின் விபரங்களை அண்மையில் வெளியிட்டார். இதன் வெளிப்பாடாகவே இவருக்கு கொலை முயற்சி செய்யப்பட்டிருக்கும் எனக் கருதப்படுகின்றது.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ கீர்த்தி வாய்ந்த ஒருவர் என்றால் மிகையில்லை. மக்களின் மனங்களை வென்றுள்ளவர். அவரும் கொலை மிரட்டலுக்கு உள்ளாகியிருக்கிறார்.

பிரதமரையும், சனாதிபதியையும் விட்டால் நல்ல தலைவர் ஒருவரைக் காணமுடியாது. அவர்களின் பின்னர் நல்ல தலைவர்களைக் காணுவது இன்று கடினமாயிருக்கின்றது. அவர்களைப் பாதுகாப்பது கூட இந்த அரசியல்வாதிகளுக்கு முடியாமல் இருக்கினறமையானது இந்நாட்டின் எதிர்கால சந்ததியினர் இருளில் மூழ்குவர் என்பதை வெளிப்படுத்துகின்றது.

ஆதலால் இந்தப் பாதாள உலகத்தவர் தாமாக கலைந்து செல்ல வேண்டும். கொலம்பியா, பிறேசில், பனாமா, மெக்சிக்கோ போன்ற நாடுகளிலும் பாதாளக் குழுவின் பின்னணியில் அரசியல்வாதிகள் செயற்பட்டதாலேயே அந்நாடுகள் சீரழிந்தன. அங்கு தலைவர்களைத் தோற்றுவிப்பது பாதாளக் குழுவினரே. இவை போன்ற நடவடிக்கைகள் ஏற்படக் காரணமாவதும் போதைப் பொருட்களின் செல்வாக்கே. இந்த சட்டவிரோத நடவடிக்கைகள் வளர்ந்து முற்றிவிடாது முளையிலேயே கிள்ள வேண்டியது அரசியல்வாதிகளின் பொறுப்பாகும்.

ஆளுங்கட்சியினர் இவர்களுக்கு

ஆளுங்கட்சியினர் இவர்களுக்கு துணைபோவதால் எதிர்க்கட்சிகளின் விமர்சனங்களுக்கு உள்ளாக வேண்டியிருக்கும். அரசியல் லாபம் கருதும் சுயநலவாதிகளை மக்கள் மறந்துவிட மாட்டார்கள். சில கொலைகளுக்குப் பொறுப்பான அரசியல்வாதிகள் சுதந்திரமாக உலவுகின்றனர் அதனை மக்களும் அறிவர்.

இன்று நிகழும் ஸ்திரமற்ற அரசியலில் பயன் ஏதுமில்லை. தம்மால், தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள தமது வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக் கொள்ள உருவாக்கப்பட்ட அரசு தவறான வழியில் செயற்படுமிடத்து மக்கள் சிந்திக்கத் தோன்றும் மற்றும் விருதயடையாத ஸ்திரமற்ற அரசின் சூழ்நிலைகளும் பாதாளக் குழுவினரின் வளர்ச்சிக்கு ஏதுவாகும்.

இன்று மக்களுக்கு சேவையாற்றும் போக்குவரத்துச் சேவை, வைத்திய சேவை என்பன திடீரென வேலைநிறுத்தத்தில் இறங்குகின்றன.

தனியார் போக்குவரத்துப் பணி ஒரு கட்டமைப்பின் கீழ் இயங்காதுள்ளது. வீதியில் பாதுகாப்பாகச் செல்ல முடிவதில்லை. பாதுகாப்பு மஞ்சள் கோடுகளுக்குள் செல்லும் போதும் விபத்துக்கள் நடைபெறுகின்றன. இதனைக் கண்டும் காணாத நிலை தோன்றியுள்ளது. இவ்வாறு நோக்கும்போது இவற்றிலும் அரசியல் சக்திகள் ஊடுருவியுள்ளதாக மக்கள் கருத இடமுண்டாகிறது மட்டுமன்றி வன்முறைக் கும்பல்களும் அதற்கு துணைநிற்பதாகவும் மக்கள் கருதுகின்றனர்.

தற்போது அரசுக்கு முக்கிய தேவையாக இருப்பது சமாதானத்தை நிலைநாட்டுவதாகும். பிரதமரும் இதற்கு முழுமூச்சில் பாடுபடுவதாகவும் தெரிகிறது. ஸ்திரத்தன்மை பெற்றிருப்பதும் தற்போதைய சமாதான முயற்சியினாலும் வெளிநாடுகளின் ஆதரவினாலுமே.

இவ்வாறான நடவடிக்கைகள் மத்தியில் இதனை நல்ல முறையில் கொண்டு செல்வது சம்பந்தப்பட்ட அனைவரினதும் பொறுப்பாகும்.

இந்நடவடிக்கைகள் அனைத்தையும் முட்டுக்கட்டைபோடும் நோக்கில் தோன்றியுள்ள பாதாளக் குழுவினரின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு பாதுகாப்புக்குப் பொறுப்பானவர்களிடம் இருக்கின்றது. எனினும் அவர்கள் இது தொடர்பாக நடவடிக்கை எடுத்துள்ளார்களா என்பது கேள்விக்குறி. அவர்களாலும் தனித்து நிறுத்திவிட முடியாது. ஆகவே கட்சிப் பேதமின்றி அரசியல்வாதிகள் அனைவரும் முன்னின்று இந்தக் குழுவினரின் நடவடிக்கைகளை மட்டுப்படுத்த வேண்டும். பாதாளக் குழுவினரும் அவர்களின் சேவைகளும் தேவைப்படும் அரசியல்வாதிகளும் இருக்கின்றனர். எனினும் இந்த நிலை தொடருமானால் மக்களினதும் நாட்டினதும் பாதுகாப்பு பிரச்சினைக்குள்ளாகும். எனவே வளர்ந்துவரும் பாதாளக் குழுவினரின் கலாச்சாரத்தை நீக்கிவிடுவது கட்சிப் பேதமற்ற அனைவரினதும் கடமையாகும்.

## குரங்கு பாஞ்சான் முகாமை அகற்ற சகல அதிகாரங்களையும் பாவிக்க வேண்டும்

### சனாதிபதி சந்திரிகா பணிப்பு

(கொழும்பு)

சர்ச்சைக்குரிய குரங்குபாஞ்சான் விடுதலைப்புலிகளின் முகாமை அங்கிருந்து அகற்றுவதற்கு அரசாங்கம் அதன் சகல அதிகாரங்களையும் பிரயோகிக்க வேண்டும் என்று சனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு சனாதிபதி அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில் இதுவரை புலிகளின் முகாம் தொடர்பாக அரசாங்கம் எதுவித நடவடிக்கையும் எடுக்காதிருப்பது தமக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்திருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

ஒரு வார காலத்துள் சம்பந்தப்பட்ட முகாமின் தற்போதைய நிலைமை குறித்துதமக்குஅறிக்கை சமர்ப்பிக்குமாறு சனாதிபதி அரசாங்கத்தைப் பணித்துள்ளார்.

## - இளவாலை, வசாவிளானில் -

## தனியார் காணிகளில் படையினர் பனை மரங்கள் பெருமளவு தறிப்பு

(யாழ்ப்பாணம்)

இளவாலை, வசாவிளான் பகுதிகளில் சிறிலங்காப் படையினரால் பெருமளவான பனை மரங்கள் தறிக்கப்பட்டு வருவதாக மக்கள் கவலையடைந்துள்ளனர்.

இவ்வாறு தறிக்கப்படும் பனை மரங்கள் குத்திகளாக்கப்பட்டு கடற்கரையோரப் பாதுகாப்பு காவலரண்களை அமைப்பதற்கும், காவலரண்களை பலப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

தினமும் பனை மரங்கள் படையினரால் தறிக்கப்பட்டு வருவதாகச் சுட்டிக் காட்டிய மக்கள் தறிக்கப்படும் காணிகள் தமக்குச் சொந்தமான தனியார் காணிகள் என்று கூறிக்கவலையும் அடைந்துள்ளனர். (33)

# தமிழீழ மீட்புநிதிக் கடன்மீளல் - 2003

**தமிழீழ மீட்புநிதிக் கடன்திட்டத்தின்கீழ் கடன் செலுத்தியோரில் 1500 பேர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ஒரு தொகுதியினரின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. மிகுதி நாளைய ஈழநாதம் நாளேட்டில் வெளியிடப்படும். இவ் 1500 பேருக்கும் எதிர்வரும் செப்ரெம்பர் 16 ஆம் நாளிலிருந்து 21 ஆம் நாள்வரை கடன் மீளளிப்புச் செய்யப்படவுள்ளது.**

## யாழ்.மாவட்டம்

### மானிப்பாய் உதவி அரச அதிபர் பிரிவு

(நேற்றைய தொடர்ச்சி)

| தொடர்பு எண் | முழுப்பெயர் |
|---|---|
| யா/மா/87 | திருமதி. மகாராணி சின்னத்துரை |
| யா/மா/123 | திருமதி. கனகம்மா விசுவலிங்கம் |
| யா/மா/190 | திருமதி. புஸ்பவதி கனகசிங்கம் |
| யா/மா/271 | திரு. அப்புத்துரை இராஜேஸ்வரன் |
| யா/மா/302 | திரு. சுப்பிரமணியம் புவனேந்திரன் |
| யா/மா/353 | திரு. ச.சுப்பிரமணியம் மகாதேவன் |
| யா/மா/457 | திரு. தம்பையா இரத்தினசிங்கம் |
| யா/மா/516 | திரு. தம்பையா கிருஷ்ணதேவன் |
| யா/மா/545 | திரு. செல்லையா சிவலிங்கம் |
| யா/மா/571 | திரு. ஆனந்தராசா மகேஸ்வரன் |
| யா/மா/573 | திரு. தம்பிப்பிள்ளை முத்துத்தம்பி |
| யா/மா/590 | திரு. சின்னத்துரை பற்குணம் |
| யா/மா/617 | திருமதி. சுமித்திராதேவி மகேந்திரன் |
| யா/மா/619 | திரு. சின்னத்துரை செல்வராசா |
| யா/மா/700 | திரு. நமசிவாயம் சிவபாதம் |
| யா/மா/732 | திரு. சின்னையா பொன்னம்பலம் |
| யா/மா/759 | திருமதி. றெஜினா இருதயநாதன் |
| யா/மா/762 | திரு. யோபு யேசுதாசன் |
| யா/மா/872 | திரு. கனகேந்திரம் இராசதுரை |
| யா/மா/974 | திருமதி. தனலட்சுமி சிவலிங்கம் |
| யா/மா/997 | திருமதி. ஞானம்மா இராஜசிங்கம் |
| யா/மா/1007 | திருமதி. ஜெயந்திராதேவி ராஜகோபாலன் |
| யா/மா/1084 | திரு. ஐயாத்துரை பரராசசிங்கம் |
| யா/மா/1090 | திருமதி. பரமேஸ்வரி நாகேந்திரம் |
| யா/மா/1094 | திருமதி. இரத்தினம் நாகமுத்து |
| யா/மா/1138 | திரு. செல்லத்துரை சிவஞானம் |
| யா/மா/1195 | திரு. கனகரத்தினம் தம்பாபிள்ளை |
| யா/மா/1302 | திரு. செந்தில்வடிவேல் பரமேஸ்வரன் |
| யா/மா/1453 | திரு. கார்த்தியேசு கதிரவேலு |
| யா/மா/1464 | திருமதி.மேரியோசேப்பின் அந்தோனிப்பிள்ளை |
| யா/மா/1556 | திரு. முருகையா தேவதாசன் |
| யா/மா/1594 | திரு. வல்லிபுரம் இராசரத்தினம் |
| யா/மா/1597 | திருமதி. மேரிகொன்சாய்க் இம்மனுவேல் |
| யா/மா/1613 | திரு. சின்னையா கனகசபை |
| யா/மா/1634 | திரு. வல்லிபுரம் நாகராசா |
| யா/மா/1653 | திரு. கந்தையா சின்னத்தம்பி |
| யா/மா/1655 | திரு. அலன் செபஸ்ரியன் |
| யா/மா/1701 | திரு. இன்னாசிமுத்து அந்தோனிப்பிள்ளை |
| யா/மா/1714 | திரு. லோப்பையாமேரி யோசேப் |
| யா/மா/1834 | திரு. இளையகுட்டி துரைராஜா |
| யா/மா/1864 | திருமதி. மங்கயர்க்கரசி நடராசா |
| யா/மா/1883 | திரு. மயில்வாகனம் இராசதுரை |
| யா/மா/1897 | திரு. இராமநாதன் சிவகுருநாதன் |
| யா/மா/1911 | திருமதி. கமலலோஜினி மகாலிங்கம் |
| யா/மா/1947 | திருமதி. இராசமணி ஞானப்பிரகாசம் |
| யா/மா/1951 | திருமதி. மேரிஜெயமலர் ஜெயந்திரன் |
| யா/மா/1954 | திரு. சின்னத்துரை சிறீதரன் |
| யா/மா/1955 | திருமதி. பசுந்தா தட்சணபரிபாலன் |
| யா/மா/1969 | திருமதி. விஜயதேவி சிறீபிரகாசா |
| யா/மா/2013 | திரு. முருகேசபிள்ளை சிவபாலன் |
| யா/மா/2037 | திருமதி. யோகம் அருள்தாஸ் |
| யா/மா/2052 | திருமதி. பேரின்பராணி செபமாலைநாதன் |
| யா/மா/2112 | செல்வி. சாரதாதேவி கதிரவேலு |
| யா/மா/2167 | செல்வி. உதயநாயகி செல்லத்துரை |
| யா/மா/2245 | திருமதி. பற்றீசியாசாமினி வென்செஸ்லஸ்டேவிற் |
| யா/மா/2384 | திருமதி. புஸ்பராணி செல்வரட்ணம் |
| யா/மா/2395 | திருமதி. புவனேஸ்வரி சிவராஜா |
| யா/மா/2419 | திரு. வயித்திலிங்கம் இராமலிங்கம் |
| யா/மா/2530 | திருமதி. தையலம்மா வீரவாகு |
| யா/மா/2563 | திரு. அலேசுப்பிள்ளை ஆரோக்கியநாதர் |
| யா/மா/2634 | திரு. வேலுப்பிள்ளை கந்தசாமி |
| யா/மா/2884 | திருமதி. வாசுமதி திருநாவுக்கரசு |
| யா/மா/2949 | செல்வி. வனிதா அலோசியஸ் |
| யா/மா/2965 | செல்வி. மேரிஇமெல்டா அல்பிறேட் |
| யா/மா/3031 | திருமதி. திரேசம்மா சவரிமுத்து |
| யா/மா/3033 | திரு. சவரிமுத்து கிறிஸ்தோப்பர் |
| யா/மா/3047 | திருமதி. அந்தோனியாப்பிள்ளை மரியநாயகம் |
| யா/மா/3097 | செல்வி. கறோலின் நித்தியா மேரி ஜோசெவ் |
| யா/மா/3124 | திருமதி. ஞானம் அலோசியஸ் |
| யா/மா/3130 | செல்வி. மரியஅசம்ரா செபஸ்ரியாம்பிள்ளை |
| யா/மா/3137 | திருமதி. தங்கம்மா கந்தையா |
| யா/மா/3182 | திருமதி. சுகுணகுமாரி இம்மனுவேல் |
| யா/மா/3260 | திரு. அந்தோனிப்பிள்ளை சந்தியாப்பிள்ளை |
| யா/மா/3313 | திருமதி. ஜெயராணி யோண்பிள்ளை |
| யா/மா/3319 | செல்வி. அன்றனிற்றா ரஞ்சினி அருளப்பு |
| யா/மா/3350 | திருமதி. ஜோசேப்பின் பேசிவல் |
| யா/மா/3354 | திரு. சின்னக்குட்டி அருச்சுனன் |
| யா/மா/3426 | திருமதி. யோகேஸ்வரி லோறன்ஸ் |
| யா/மா/3444 | செல்வி. பற்றீசியா போல் |
| யா/மா/3470 | திருமதி. கதிராசிப்பிள்ளை ஆறுமுகம் |
| யா/மா/3515 | திருமதி. விமலா சேதுகாவலர் |
| யா/மா/3556 | திருமதி. இராசமணி சண்முகராஜா |
| யா/மா/3574 | திரு. செபமாலை டேவிற் |
| யா/மா/3587 | திரு. குட்டித்தம்பி பேரம்பலம் |
| யா/மா/3651 | திருமதி. ஐசிந்தா ஜெயானந்தம் |
| யா/மா/3679 | திருமதி. பராசக்தி சதாசிவம் |
| யா/மா/3682 | திரு. முத்தையா வெற்றிவேலு |
| யா/மா/3749 | திரு. ஞானமுத்து செல்வச்சாமி |
| யா/மா/3852 | திருமதி. சுபத்திரா பூபாலசிங்கம் |

### உடுவில் உதவி அரச அதிபர் பிரிவு

| தொடர்பு எண் | முழுப்பெயர் |
|---|---|
| யா/உ/57 | திருமதி. தேவி செல்லையா |
| யா/உ/118 | திரு. செல்லையா தில்லைநாதன் |
| யா/உ/176 | திரு. சோமாஸ்கந்தக்குருக்கள் சந்திரகாந்தக்குருக்கள் |
| யா/உ/205 | திரு. தர்மலிங்கம் கதிர்காமநாதன் |
| யா/உ/257 | திரு. வல்லிபுரம் சற்குணசிங்கம் |
| யா/உ/264 | திருமதி. செல்வராணி பரராஜசிங்கம் |
| யா/உ/279 | திரு. செல்லையா தங்கராசா |
| யா/உ/332 | திரு. கணபதி சின்னத்தம்பி |
| யா/உ/398 | திரு. வல்லிபுரம் பத்மநாதன் |
| யா/உ/427 | திரு. கணபதி சிவஞானம் |
| யா/உ/494 | திரு. செல்லர் இரத்தினம் |
| யா/உ/621 | திரு. செல்லத்துரை ஜெயசோதிவரதன் |
| யா/உ/646 | திரு. கருணைப்பிரகாசம் கருணாகரன் |
| யா/உ/692 | திரு. அம்பலவாணர் நடராசா |
| யா/உ/700 | திரு. தம்பிஐயா பரமேஸ்வரன் |
| யா/உ/723 | திருமதி. றேணுகா விவேகானந்தன் |
| யா/உ/734 | திரு. சீனிவாசகம் இராஜவரோதயம் |
| யா/உ/761 | திரு. கதிரவேலு செல்வராஜா |
| யா/உ/886 | திரு. குமரவேற்பிள்ளை முத்துக்குமாரதாஸ் |
| யா/உ/1036 | திரு. நடராசபிள்ளை குணசேகரம் |
| யா/உ/1037 | செல்வி. சுகிர்தம் நல்லையா |
| யா/உ/1104 | திரு. ஆறுமுகம் சுப்பிரமணியம் |
| யா/உ/1108 | திரு. கந்தையா மயில்வாகனம் |
| யா/உ/1119 | திரு. முத்துக்கிட்டிணர் பரமாநந்தம் |
| யா/உ/1154 | திருமதி. றோகினி குமாரதாசன் |
| யா/உ/1174 | திரு. சபாபதி அன்ரன் தேவதாசன் |
| யா/உ/1190 | திரு. கனகசபை குணரத்தினம் |
| யா/உ/1192 | திரு. கணபதிப்பிள்ளை கிருஷ்ணமூர்த்தி |
| யா/உ/1194 | திருமதி. கமலநாயகி வெல்சந்திரன் |
| யா/உ/1206 | திரு. செல்லத்துரை முத்துக்குமாரு |
| யா/உ/1310 | திருமதி. கனகநாயகி சிவனேஸ்வரன் |
| யா/உ/1334 | திரு. இளையதம்பி பொன்னையா |
| யா/உ/1350 | திரு. நடேசன் சிறிதரன் |
| யா/உ/1371 | திரு. அன்னதானம் அருட்பிரகாசம் |
| யா/உ/1408 | திருமதி. மகேஸ்வரி இரத்தினலிங்கம் |
| யா/உ/1437 | திருமதி. பாரதாம்பிகை குணசிங்கம் |
| யா/உ/1632 | திரு. ஆறுமுகம் இராமச்சந்திரன் |
| யா/உ/1660 | திரு. நாகமுத்து சிவஞானம் |
| யா/உ/1745 | திரு. பரஞ்சோதி நகுலேஸ்வரன் |
| யா/உ/1799 | திருமதி. செல்வறஞ்சிதராணி சிறீஸ்கந்தராசா |
| யா/உ/1805 | திரு. வேலுப்பிள்ளை சம்பந்தநாதன் |
| யா/உ/1912 | திரு. பொன்னையா நடேசு |
| யா/உ/1963 | திரு. துரையப்பா இரத்தினம் |
| யா/உ/1971 | திரு. செல்லையா இராசையா |
| யா/உ/2078 | திரு. துரையப்பா விசாகபதி |
| யா/உ/2117 | திரு. நாகலிங்கம் கதிரமலை |
| யா/உ/2134 | திரு. வைத்திலிங்கம் மார்க்கண்டு |
| யா/உ/2210 | திரு. சின்னத்துரை சிவகுமாரன் |
| யா/உ/2339 | திருமதி. மஞ்சுளாதேவி குமாரதேவன் |
| யா/உ/2373 | திரு. நாகலிங்கம் செல்லத்துரை |
| யா/உ/2548 | திரு. சின்னத்தம்பி மகேந்திரராஜா |
| யா/உ/2594 | செல்வி. பாக்கியரட்ணம் இராமலிங்கம் |
| யா/உ/2609 | திருமதி. சோமேஸ்வரி கைலாசநாதன் |
| யா/உ/2664 | திருமதி. விக்கினேஸ்வரி பாஸ்கரலிங்கம் |
| யா/உ/2737 | திருமதி. யோகரத்தினம் சிங்காரவேலு |
| யா/உ/2807 | திருமதி. செல்வராணி விபுலானந்தன் |
| யா/உ/2926 | செல்வி. ஜெயமலர் அப்புத்துரை |
| யா/உ/2989 | திரு. கந்தன் சுப்பிரமணியம் |
| யா/உ/3069 | திரு. பொன்னம்பலம் தியாகராசா |
| யா/உ/3091 | திருமதி. அன்னம்மா அருள்பிரகாசம் |
| யா/உ/3147 | திரு. செல்லையா நவரட்ணம் |
| யா/உ/3154 | திரு. சோமசுந்தரஐயர் சோமாஸ்கந்தஐயர் |
| யா/உ/3198 | திருமதி. அருட்சக்தி சிவஞானசுந்தரம் |

### கோப்பாய் உதவி அரச அதிபர் பிரிவு

| தொடர்பு எண் | முழுப்பெயர் |
|---|---|
| யா/கோ/75 | திரு. இராசையா பழனிப்பிள்ளை |
| யா/கோ/85 | திரு. தம்பு பத்மநாதன் |
| யா/கோ/94 | திரு. பெரியதம்பி இரத்தினசபாபதி |
| யா/கோ/161 | திரு. நாகலிங்கம் துரைச்சாமி |
| யா/கோ/191 | செல்வி. கௌசலா பாலசிங்கம் |
| யா/கோ/277 | திரு. இராசதுரை செல்வரத்தினம் |
| யா/கோ/343 | திரு. நடராசா பாலகிருஷ்ணன் |
| யா/கோ/489 | திரு. அரியகுட்டி திருநாவுக்கரசு |
| யா/கோ/527 | திரு. கந்தையா ஆழ்வாப்பிள்ளை |
| யா/கோ/549 | திரு. சின்னத்துரை கனகலிங்கம் |
| யா/கோ/554 | திரு. செல்லத்துரை மகேந்திரம் |
| யா/கோ/775 | திரு. இராமலிங்கம் சிவஞானசுந்தரம் |
| யா/கோ/800 | திரு. சந்தர் செல்லர் |
| யா/கோ/868 | செல்வி. அருணஜோதி சிவசோதிலிங்கம் |
| யா/கோ/875 | திரு. கிறிஸ்ரி ஜெயக்குமார் பங்கிறாஸ் |
| யா/கோ/1065 | திருமதி. மகேஸ்வரி கதிரேசு |
| யா/கோ/1228 | திரு. முதலி பொன்னன் |
| யா/கோ/1268 | திரு. செல்லத்துரை பரமானந்தம் |
| யா/கோ/1334 | திரு. நாகலிங்கம் சோதிலிங்கம் |
| யா/கோ/1357 | திருமதி. செவ்வந்திமலர் திரவியம் |
| யா/கோ/1483 | திரு. கதிரவேலு அப்புத்துரை |
| யா/கோ/1539 | திரு. செல்லப்பா நடராசா |
| யா/கோ/1559 | திரு. கந்தையா இராசலிங்கம் |
| யா/கோ/1569 | திருமதி. ராஜலட்சுமி செல்லத்துரை |
| யா/கோ/1612 | திரு. சின்னத்துரை செல்லையா |
| யா/கோ/1774 | திருமதி. சத்தியதேவி தர்மராஜா |
| யா/கோ/1824 | திரு. கதிரவேலு குணசீலன் |
| யா/கோ/1920 | திரு. சுப்பையா சண்முகநாதன் |
| யா/கோ/1958 | திருமதி. வள்ளிப்பிள்ளை செல்லர் |
| யா/கோ/1984 | திரு. தம்பு ஆனந்தராசா |
| யா/கோ/2043 | திரு. கெங்காதரன் கிருபானந்தன் |
| யா/கோ/2060 | திரு. கந்தையா மயில்வாகனம் |
| யா/கோ/2078 | திருமதி. பராசக்தி தர்மராசா |
| யா/கோ/2106 | திரு. வயித்திலிங்கம் இராசரத்தினம் |
| யா/கோ/2151 | திரு. கதிரவேலு செல்வராசா |
| யா/கோ/2168 | திரு. வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் |
| யா/கோ/2251 | திரு. வேலுப்பிள்ளை குகனேஸ்வரன் |
| யா/கோ/2300 | திரு. பொன்னையா தியாகராசா |
| யா/கோ/2409 | திரு. கதிரன் முருகன் |
| யா/கோ/2427 | திரு. கந்தர் செல்லையா |
| யா/கோ/2455 | திரு. பெரியான் அப்புத்துரை |
| யா/கோ/2485 | திருமதி. நாகம்மா கந்தசாமி |
| யா/கோ/2513 | திருமதி. சின்னத்தங்கம் இரத்தினம் |
| யா/கோ/2546 | திரு. மார்க்கண்டு உதயகுமார் |
| யா/கோ/2554 | திரு. தம்பிராசா ஜெயக்குமார் |
| யா/கோ/2590 | திரு. நடராசா கெங்காதரன் |
| யா/கோ/2843 | திருமதி. தில்லையம்மா வீரசிங்கம் |
| யா/கோ/2870 | திரு. கந்தையா வேலுப்பிள்ளை |
| யா/கோ/2941 | திரு. வினாசித்தம்பி பரமேஸ்வரன் |
| யா/கோ/3099 | திரு. சோமசுந்தரம் குகதாசன் |
| யா/கோ/3128 | திரு. செல்லப்பா மாணிக்கவாசகர் |
| யா/கோ/3156 | திரு. வீரசிங்கம் பரமானந்தன் |
| யா/கோ/3227 | திரு. சிவஞானசுந்தரம் ஸ்ரீஸ்கந்தராஜா |
| யா/கோ/3300 | திருமதி. பாக்கியலட்சுமி திருச்செல்வம் |
| யா/கோ/3347 | திரு. நமசிவாயம் கிரிதரன் |
| யா/கோ/3420 | திரு. ஐயாத்துரை சிங்கராசா |
| யா/கோ/3503 | திரு. செல்வநாயகம் அழகராசா |
| யா/கோ/3513 | திருமதி. அன்னம்மா சிவசுப்பிரமணியம் |
| யா/கோ/3575 | திருமதி. மனோன்மணி குணரத்தினம் |
| யா/கோ/3578 | திருமதி. மனோன்மணி சீவரத்தினம் |
| யா/கோ/3642 | திரு. கிருஷ்ணர் சிவராசா |
| யா/கோ/3756 | திரு. சின்னத்துரை அபிமன்னன் |
| யா/கோ/3770 | திருமதி. பிறிஜெட் லூயிஸ் |
| யா/கோ/3800 | திரு. ஆறுமுகம் கிருஸ்ணராஜா |
| யா/கோ/3897 | செல்வி. றதினி வில்லியம் |
| யா/கோ/3905 | திரு. சின்னத்துரை இராசேந்திரம் |
| யா/கோ/3959 | திரு. கந்தையா சுப்பிரமணியம் |
| யா/கோ/4219 | திரு. சின்னையா வேலுப்பிள்ளை முருகையா |
| யா/கோ/4293 | திரு. சின்னத்தம்பி கந்தையா சின்னத்தம்பி |
| யா/கோ/4397 | திரு. பிறைசூடி கணேசலிங்கம் |
| யா/கோ/4435 | திரு. கந்தன் சபாபதி |
| யா/கோ/4489 | திரு. செல்லர் கணபதிப்பிள்ளை |
| யா/கோ/4542 | திருமதி. கெங்காதேவி லோகேந்திரன் |
| யா/கோ/4650 | திரு. சின்னவன் குணசிங்கம் |
| யா/கோ/4774 | திரு. ஆழ்வான் சின்னராசா |
| யா/கோ/4825 | திரு. இளையதம்பி செல்லையா |
| யா/கோ/4881 | திரு. இராசரத்தினம் தளையசிங்கம் |
| யா/கோ/5042 | திரு. சேனதிராசா சதாசிவம் |
| யா/கோ/5093 | திருமதி. குசலகுமாரி நவரத்தினவேலு |
| யா/கோ/5111 | திரு. செல்லையா கனகரத்தினம் |
| யா/கோ/5175 | திருமதி. இராசமணி சண்முகம் |
| யா/கோ/5200 | திரு. சின்னத்துரை சற்குணநாதன் |
| யா/கோ/5362 | திரு. இளையதம்பி நடராசா |
| யா/கோ/5402 | திரு. வல்லிபுரம் இராசையா |
| யா/கோ/5513 | திருமதி. கனகம்மா செல்லத்துரை |
| யா/கோ/5534 | திரு. இராசரத்தினம் நடராசா |
| யா/கோ/5609 | திருமதி. செல்வக்குமாரி சந்திரகாந்தன் |
| யா/கோ/5613 | திரு. வைத்திலிங்கம் சந்திரன் |
| யா/கோ/5697 | திரு. இராமன் செல்லையா |
| யா/கோ/5718 | திரு. சிவக்கொழுந்து அன்னலிங்கம் |
| யா/கோ/5760 | திருமதி. கமலாம்பிகை இராமநாதன் |
| யா/கோ/5812 | திருமதி. புண்ணியவதி சிவயோகேஸ்வரன் |
| யா/கோ/5835 | திரு. செல்லையா சோமசுந்தரம் |
| யா/கோ/5852 | திருமதி. சாரதாதேவி யோகநாதன் |
| யா/கோ/5878 | திரு. செல்லையா தேவேந்திரா |
| யா/கோ/5904 | திரு. கந்தப்பிள்ளை முருகுப்பிள்ளை |
| யா/கோ/6030 | திரு. கதிர்காமு பொன்னையா |
| யா/கோ/6036 | திருமதி. புஸ்பராணி சண்முகநாதன் |
| யா/கோ/6080 | திரு. சதாசிவம் சுப்பிரமணியம் |
| யா/கோ/6087 | திரு. பொன்னுத்துரை சிவானந்தன் |
| யா/கோ/6172 | திருமதி. பெரியாள் பூதன் |
| யா/கோ/6219 | திரு. சின்னத்தம்பி புவனேந்திரநாதன் |
| யா/கோ/6234 | திருமதி. மனோன்மணி நல்லையா |
| யா/கோ/6250 | திரு. சுப்பையா சச்சிதானந்தநாதன் |
| யா/கோ/6276 | திரு. பொன்னுத்துரை பரமானந்தன் |
| யா/கோ/6286 | செல்வி. விஜியலக்சுமி சோமசுந்தரம் |
| யா/கோ/6324 | திரு. ஆறுமுகம் பாலசுப்பிரமணியம் |
| யா/கோ/6384 | திருமதி. தங்கப்பிள்ளை சேனாதிராசா |
| யா/கோ/6413 | திரு. நவரெட்ணம் ஜீவரெட்ணம் |
| யா/கோ/6431 | திரு. கனகசபை அமிர்தலிங்கம் |
| யா/கோ/6433 | திருமதி. கண்மலர் புவனேந்திரன் |
| யா/கோ/6443 | திரு. சரவணமுத்து பொன்னம்பலம் |
| யா/கோ/6445 | திரு. கோவிந்தன் சிவசம்பு |

# அச்சுவேலியில் படையினர் நடவடிக்கையால் மக்கள் அகதிகளாக வாழ நிர்ப்பந்தம்!

(யாழ்ப்பாணம்)

**அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினை மையமாகக் கொண்டு குடிகொண்டுள்ள படையினரின் முகாமினால் சுமார் 40 வரையான தமிழ் குடும்பங்களின் வாழ்விடங்கள் பாதிக் கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.**

அச்சுவேலிப் பகுதியில் 1995ஆம் ஆண்டுலிருந்து அப்பகுதி மக்களின் நிம்மதிக்கு குந்தகம் விளைவிக் கும் முகமாக இப்பகுதிகளிலுள்ள சுமார்30 வரையான வீடுகள் படையி னரின் பாவனையிலுள்ளன.

அத்துடன் சுமார் 10 வரையான வீடுகளின் கூரைகள்இராணுவத் தின ரால் அகற்றப்பட்டு பாதுகாப்பு அரண்கள் அமைக்கப்பட்டு பாது காப்பு வேலிகள் அமைப்பதற் காகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் வீடுகள் அடங்கலாக வுள்ள 48 பரப்புக் காணி மிதிவெடி கள் புதைக்கப்பட்டு பொதுமக்களின் பாவனைக்குதவாத நிலையிலுள் ளன. இதனால் விவசாயத்தை நம்பி வாழும் இப்பகுதி மக்களும் பெரும் கஸ்டத்தை எதிர் நோக்குவதுடன் இவ்வீட்டுக்கு உரிமையாளர்களான தமிழ் மக்கள் யாழ்.குடாநாட்டில் உள்ளூர் அகதிகளாக வாழ்வதும் குறிப்பிடத்தக்கது. (33)



பாரதிபுரம் வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற ஆரம்பக்கல்வி கற்பித்தல் உபகரணக் கண்காட்சி (சோதி)

## நிர்மாண வேலை தாமதம்

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம், கமநலசேவை நிலையம், மிருக வைத்திய நிலையம், ஆகிய கட்ட டங்களின் நிர்மாணவேலைகள் ஒப் பந்தகாரர்கள் இன்மையால் இடம் பெறாதுள்ளன. (05)

## பொலிசாரின் அலட்சியம் குறித்து பொ. ஐ. மு. குற்றம் சாட்டுகிறது!

(கொழும்பு)

பொலிசாரின் அலட்சியத்தால் பொதுமக்களின் பாதுகாப்புத் தொடர்பாகச் சிக்கல்கள் ஏற்பட் டுள்ளன என பொ.ஐ.முன்னணியின் ஊடகப் பேச்சாளர் ச... அமுனுகம தெரிவித்துள்ளார்.

பொலிசாரின் பாதுகாவலில் வைக்கப்படும் நபர்களின் பாதுகாப் பும் தற்போது கேள்விக்குறியாகி யுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கிழக்கில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலைக்கும் பாதுகாப்புத் தரப்பினரின் அசமந்தப் போக்கே காரணம் என்று பொ.ஐ.முன்னணி யின் ஊடகப் பேச்சாளர் குற்றம் சாட்டியுள்ளார்.

இதேவேளை முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்ட போதும் பொலிசார் பக்கச்சார்பாக நடந்து கொள்வ துடன்அவர்களுக்கு வேண்டப்பட்ட வர்களின் முறைப்பாடுகளை மாத்திரம் பதிவு செய்துகொள்வ தாகவும் அவர் கூறியுள்ளார்.

## அமைச்சருக்கெதிராக செய்தி வெளியிட்ட சிங்களப் பத்திரிகை மீது 750 மில்.நட்டஈடு

வர்த்தக மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநா யக்க பற்றி அவதூறாகச் செய்தி வெளியிட்ட வாராந்த சிங்களப் பத்தி ரிகை மீது 750 மில்லியன் ரூபா நட்டஈடாகத் தருமாறு கோரி சட்டத் தரணி மூலம் அறிவித்துள்ளனர்.

இந்தக் கடிதம் கிடைக்கப் பெற்று,இருவார காலத்துக்குள் நட்ட ஈடு வழங்காவிடின்- சட்ட நடவ டிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் அபான்ஸ்"க்கு விற்கப் படுகிறது. சொக்ஸிக்கும், ரவிக்கும் கொமிஷன் என்ற செய்தியால் தனக்கு அவதூறு ஏற்பட்டுள்ளதாக வும் இத னால் அமைச்சர் என்ற வகையிலும் ஒரு நபர் என்ற வகையிலும் தனக்கு 750 மில்லியன் ரூபா தருமாறு, அமைச்சர் ரவி கரு ணாநாயக்க சட்டத்தரணி மூலம் மானநட்டம் கோரி லேக்ஹவுஸ் பத்திரிகை ஊடாக அறிவித்தல் கொடுத்துள்ளார்.

## இலங்கையில் 1400 பாடசாலைகளில் கணினி மத்திய நிலையங்கள்

### அமைச்சர் கருஜெயசூரிய தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை முழுவதிலும் உள்ள 1400 பாடசாலைகளில் கணினி மத் தியநிலையங்கள் ஆரம்பிக்க வுள்ள தாக கல்வியமைச்சர் கருணா சேன கொடித்துவக்கு கூறியுள்ளார்.

அடுத்த ஆண்டின் முதல் தவ ணையின் போது இந்த நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படுமென அவர் மேலும் கூறியுள்ளார். விஞ்ஞா னம், ஆங்கிலப்பாடங்களை கற்பிப்ப தற்கான புதிய நவீன முறைகள் தேசிய கல்வி நிறுவனத்தால் மேற் கொள்ளப்படவுள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார். அத்துடன் பிரெஞ்ச்,ஜப்பானிய, சீன மொழி களை கணினிகள் மூலமாக கற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

## தொழில் நுட்பக் கல்லூரிகளில் சில பாடங்களை நீக்கமுடிவு

தற்போதைய சூழ்நிலைக்கு உகந்ததல்ல என்று கருதப்படுகின்ற பாடங்களைத் தொழில்நுட்பக் கல் லூரியிலிருந்து நீக்குவதற்குத் தீர் மானித்திருப்பதாக மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் பயிற்சி அமைச்சர் கபீர் காசிம்கடந்த வெள்ளிக்கிழமை நாடாளு மன்றத்தில் தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் சந்திரனெட்டி எழுப்பிய வாய்மூலக் கேள்வி ஒன்றுக்குப்பதிலளித்துப் பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் சுருக்கெழுத்துக் கல்வியை அகற்றியிருப்பதாகவும் அதற்குப் பதிலாக கணினிக்கல் வியை அறிமுகப்படுத்தியிருப்ப தாகவும் அவர் மேலும் தெரிவித் துள்ளார்.

## இடமாற்றம்

(ஒட்டுசுட்டான்)

தற்காலிகமாக இயங்கிவரும் ஒட்டுசுட்டான் உதவி அரசாங்க அதிபர் செயலகம் இன்னும் ஒரு மாதத்திற்குள் ஒட்டுசுட்டான் சிவன் கோவிலடியில் உள்ள தனியார் வீடொன்றில் இயங்க உள்ளது என ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் திருமதி ந. சௌவ்ராசா தெரிவித் துள்ளார். (05)

## கால்நடை இடம்பெயர்சேவை

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் முல்லை மாவட்டச் செயலகமும், மாங்குளம் பிரதேச கால்நடை உற்பத்திசுகாதாரத் திணைக் களமும் இணைந்து நடாத்தி வரும் கால்நடை இடம் பெயர்சேவையில் மாங்குளம் பிரதேச செயலர் பிரிவில் 580 கால் நடைகளுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டது. மேலும் 08 நாம்பன் மாடுகளுக்கு நலம் அடித்தும், ஒரு பசுவிற்கு செயற்கை முறைச் சினைப்படுத்தலும் செய்யப்பட்ட தாக, த.பொ.மே நிறுவன முல்லை மாவட்டச் செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்படுகின்றது. (26)

## கருத்தரங்கு

(ஒட்டுசுட்டான்)

மாங்குளம் பிரதேசத்தில்விவசாயி களுக்கு கருத்தரங்கு ஒன்று கடந்த செவ்வாயன்று நடைபெற்றுள்ளது.

மாங்குளம் கமக்கார அமைப்பு தலைவர் சிவானந்தன் தலைமை யில் நடைபெற்ற கருத்தரங்கில் ஒலுமடு கமநல சேவை உத்தியோ கத்தர் மற்றும் விவசாய போதனா சிரியர் ஆகியோர் கருத்துரங்கினை வழங்கினர்.

இதில் உலக உணவு வேலைத் திட்டத்தின் செயற்பாடுகள், கமக் கார அமைப்பின் விதிமுறைகளும் கால போக பயிர்ச்செய்கைபற்றியும் கலந்துரையாடப்பட்டன. (05)

## செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த மகோற்சவம்

சரித்திரப் புகழ் வாய்ந்த தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 27-08-2003 புதன்கிழமை பின்னிரவு 11.36 மணியளவில் கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகின்றது.

அடுத்தமாதம் 8ஆம் திகதி சப்பறத்திருவிழாவும், 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும், 10ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளது.

## பனங்காமம்பற்று ப.நோ.கூ.சங்க அனுசரணையுடன் மண்பரிசோதனை

(அலுவலக செய்தியாளர்)

பனங்காமம் பற்று பலநோக்குகூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் சீ.ஐ.சி.நிறுவனத்தினால் மண்பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

வன்னியில் பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்தப்படுகின்ற நிலங்களுக்கு ஏற்ற வளமாக்கிகளை பயன்படுத்த ஏற்றவகையில் மேற்படி நிறுவனம் மண்பரிசோதனை மேற்கொள்ளவுள்ளது. இது தொடர்பான மேலதிக விபரங்களை பனங்காமம் பற்று பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தினூடு தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

(பா)


**TECH COMPUTER TRAINING CENTRE**

**புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்**

முன்னர் புதுக்குடியிருப்பிலும், மல்லாவியிலும் இயங்கி வந்த டெக் கணினிப் பயிற்சி நிலையம் புதிய நவீன வசதிகளுடன் வட்டக்கச்சியில் இயங்குகின்றது. இதன் முதலாவது புதிய தொகுதி ஒன்று,

01-09-2003 திங்கட்கிழமை காலை 9.30 மணி ஆரம்பிக்கின்றது

கற்கைநெறி

MS-OFFICE
- Introduction
- Windows
- MS-Word
- MS-Excel
- MS-PowerPoint
- MS-Access

காலம்: 4 மாதங்கள்

கட்டணம்: 500/= x 4

இடம்: ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை, வட்டக்கச்சி

- கற்க விரும்புவோர் நேரில் தொடர்புகொள்ளவும்.
- உங்கள் வசதிக்கும் எங்கள் வசதிக்கும் ஏற்ப வகுப்புக்கள் தீர்மானிக்கப்படும்.
- வகுப்புரைகள் தமிழில் நடாத்தப்படும்.
- கற்கைநெறி முடிவில் பெறுமதி மிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்.
- அனுமதிக் கட்டணம் 500/= மட்டுமே.

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டவையே

(3661) பொருண்மிய மதியுரையகம்.



## 3ஆம் ஆண்டு நினைவலைகளில்

தாயின் மடியில் 01 - 04 - 1975



தாயக மடியில் 26 - 08 - 2000

**மேஜர் எமர்சன்/ திருவருள் (சீனிமாமா)**

அப்புத்துரை-சிவானந்தமூர்த்தி

வல்வெட்டித்துறை

தாய் மண் காக்க<br>
தன்னுயிரை ஈகம் செய்து<br>
கல்லறைத் தொட்டிலில்<br>
கண் துயிலும் எமர்சனே<br>
விண்ணேகிய விடிவெள்ளியே<br>
வீண் போகாது உன் கனவுகள்<br>
நிம்மதியாய் விழி மூடித் தூங்கு<br>
நிச்சயம் மலரும் தமிழீழம்.

இந்நாளில் மேஜர் எமர்சனோடு அனைத்து மாவீரர் களையும் நினைவு கூருகின்றோம்.

அப்புத்துரை குடும்பத்தினர்<br>
[இராமநாதன் மேஸ்திரியார்]

நி.முகவரி:<br>
பெரியதம்பிரான் கோவிலடி,<br>
பொலிகண்டி மேற்கு<br>
வல்வெட்டித்துறை.

த.முகவரி:<br>
உலகளந்த பிள்ளையார்<br>
கோவிலடி,<br>
1ஆம் வட்டாரம்,<br>
புதுக்குடியிருப்பு.

(3484)



**சிந்தனைக்கு**

தமிழ் மக்களின் போராட்டம் தன்னாட்சி உரிமையை வென்றெடுப்பதற்கான போராட்டம்; தமது அரசியல் தலைவிதியைத் தாமே நிர்ணயித்துக்கொள்ளும் அரசியல் சுதந்திரத்திற்கான போராட்டம்.

தமிழீழத்தேசியத் தலைவர்


ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 25-08-2003


## மோசமான உத்தரவு

வவுனியா பொங்குதமிழ் ஏற்பாட்டுக் கலந்துரையாடலில் பங்கு கொண்ட அரசாங்க ஊழியர்களிடம் அவ்வாறு அந்த நிகழ்வில் கலந்து கொண்டமை குறித்து எழுத்து மூலமான விளக்கத்தை திணைக்களத் தலைவரினூடாக அனுப்பி வைக்குமாறு சிறிலங்கா இராணுவம் உத்தரவிட்டிருக்கிறது. இது அவ் ஊழியர்களின் அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயல் என, பொங்குதமிழ் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

"பொங்குதமிழ்" எழுச்சி நிகழ்வு ஒரு வன்முறைப் போராட்டமல்ல என்பதும் தமிழ்மக்கள் தமது அரசியல் உள்ளக்கிடக்கை என்ன என்பதை சர்வதேசத்திற்கும் வெளிப்படுத்தும் ஒரு நிகழ்வு என்பதும் அந்த நிகழ்வு நடைபெறும் முறையைப் பார்த்த அனைவரும் ஒப்புக் கொண்டிருக்கின்றனர்.

பல வருடங்களாக இராணுவ அழுத்தங்களுக்கு உட்பட்டு தமது மனவுணர்வுகளை வெளிப்படுத்த முடியாது தவித்துக் கொண்டிருந்த மக்கள் – பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சியின் சமாதானத்திற்கான போரினால் பெரும் துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருந்த மக்கள், தமது அரசியல் அபிலாசைகளை வெளியிட இந்த நிகழ்வைப் பயன்படுத்தினர்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட ஒரு வருட காலத்திற்கு முன்னரே யாழ். பல்கலைக்கழகத்தில் பொங்குதமிழின் முதல் நிகழ்வு நடைபெற்றது. இது புலிகளின் அரசியல் இலட்சியமும் தமிழ் மக்களின் அபிலாசைகளும் ஒன்று தான் என்பதை தெளிவுபடுத்தியது.

புலிகளிடமிருந்து தமிழ் மக்களை விடுவிக்கப் போவதாகக் கூறி சனாதிபதி சந்திரிகா தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் நடத்திய யுத்தம் வெறும் ஏமாற்று என்பதை அது உலகிற்கு உணர்த்தியது. தமிழ் மக்களின் இலட்சியத்தைச் செயற்படுத்துபவர்களே புலிகள் என்பதனையும் அது வெளிக்காட்டியது.

இதன் தொடர்ச்சியாக , அமைதி முயற்சிகள் நடைபெற்றுவரும் இவ்வேளையில் அந்த முயற்சிகளுக்கு எதுவிதத்திலும் பாதிப்பு ஏற்படுத்தாத வகையில் தமது உள்ளத்து உணர்வுகளை மாவட்டம் மாவட்டமாக தமிழ்மக்கள் வெளிப்படுத்தி வருகின்றனர்.

இது சனநாயக ரீதியான ஒரு வழிமுறையல்ல என எவரும் கூறிவிட முடியாது. இவ்வாறான முறையில் தமிழ்மக்கள் தமது உணர்வுகளை வெளிப் படுத்துவதை எவரும் தடுக்கவும் கூடாது. ஆனால் சிறிலங்காப் படைகள் தமிழ்மக்களின் சனநாயக வழிமுறையிலான இந்தச் செயற்பாட்டிற்கு முட்டுக்கட்டை போடுபவர்களாகவே என்றும் செயற் பட்டு வருகின்றன.

முதலாவது பொங்குதமிழ் நிகழ்வை அப்பொழுது போர் நடைபெற்றுக் கொண்டிருந்ததைச் சாதகமாக வைத்துக்கொண்டு ஆயுத முனையில் அடக்க முயன்றனர். பொங்குதமிழ் நிகழ்வை ஏற்பாடு செய்த மாணவர்களுக்கு கொலை மிரட்டல்கள் விடப்பட்டன. கலந்து கொள்ளச் சென்றோர் இராணுவக் காவலரண்களில் தடுத்து நிறுத்தப்பட்டனர். முட்கம்பி வேலிகளைப் போட்டு வீதிகளை மூடினர். ஆனால் பெருமளவான மக்கள் இந்தத் தடைகளையெல்லாம் மீறிச்சென்று நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இப்பொழுதும் கூட ஏற்பாட்டாளர்கள் முதல் கலந்து கொள்ளும் பொது மக்கள் வரை அனைவர் மீதும் சிறிலங்காப் படையினர் கெடுபிடிகளை மேற் கொண்டே வருகின்றனர். ஏற்பாடு செய்பவர்களை விசாரணைக்கு உட்படுத்துவது முன்னோடி வேலைகளில் ஈடுபடுவோரை மிரட்டுவது முதல் கலந்து கொள்ளச் செல்லும் பொதுமக்களைச் சோதனை யிடுதல் போன்ற நடவடிக்கைகள் மூலம் அவர்களைக் கலந்து கொள்வதைத் தடுப்பது/தாமதப்படுத்துவது போன்றவற்றை மேற் கொண்டே வருகின்றனர்.

இவ்வாறானதொரு நடவடிக்கையே வவுனியா பொங்குதமிழ் ஏற்பாட்டு நிகழ்வில் கலந்து கொண்ட அரச ஊழியர்களுக்கு விடுக்கப்பட்ட இவ் உத்தரவாகும். இதன் மூலம் அவர்களுக்கு தொழில் ரீதியான அச்சவுணர்வையும் மேலதிகாரிகளுடனான முரண்பாடுகளையும் ஏற்படுத்தி அவர்களை அச்சுறுத்துவதற்குப் படையினர் முயல் கின்றனர்.

இது தமிழ்மக்கள் சமாதான வழிமூலம் தமது அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய ஒரு தீர்வு கிடைக்கும்/தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் எனக்கொண்டுள்ள நம்பிக்கையை சிதைக்கும் செயலாகும். இவ்வாறான நடவடிக்கைகளே சனநாயக வழிமுறைகளில் தமிழ்மக்களை நம்பிக்கையிழக்கச் செய்தவையாகும்.

# தெற்காசியாவின் விவசாயத்துறை மேம்பாடு நவீன தொழில்நுட்பத்திலே தங்கியுள்ளது

**- பிரதமர் ரணில் சென்னையில் கருத்து**

(கொழும்பு)

தெற்காசியாவில் விவசாயத்தை விருத்தி செய்வதற்கு நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதால் பெரும் நன்மை கிடைக்கும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தெற்காசிய விவசாய நடவடிக்கைகளில் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதனால் மிகவும் வெற்றிகரமான விவசாய உற்பத்திகளை ஈட்டக்கூடிய சக்தியை பெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் உணவுப் பாதுகாப்பு கிராமிய அபிவிருத்தி நிலையத்தை நேற்று முன்தினம் திறந்துவைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# சிறைக் கைதிகளில் 80 வீதமானோர் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள்!

(கொழும்பு)

அரச சிறைச்சாலைகளில் இடம் பெறும் சட்டவிரோத செயல்களை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட இருக்கின்றது.

இந்தக் குறிக்கோளை நிறைவேற்றும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு பயிற்சி அளிப்பதே சிறந்த பயனைப் பெறும் என்று சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைகளில் போதைப் பொருள் பாவனை அதிகரித்து வருவதாக தெரிவித்த அவர், சிறைத் தண்டனையை அனுபவிப்பவர்களில் எண்பது சதவீதத்துக்கும் அதிகமானோர் போதைப்பொருளுக்கு அடிமையாக இருப்பதே இதற்கு காரணம் என்றும் கூறினார்.

சிறைச்சாலைகளில் கையடக்க தொலைபேசிகளைப் பயன்படுத்தி வரும் சில கைதிகள் பெருமளவில் கொலைகளையும், கொள்ளைகளையும் திட்டமிட்டு செய்கின்றார்கள் எனத் தெரிவித்துள்ளனர்.

இத்தகைய நடவடிக்கைகளை ஒழிப்பதற்கென 20 சிறை அதிகாரிகள் அடங்கிய விசேட பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

# போக்குவரத்திற்கு இடையூறு விளைவித்த 19 பேர் மீது இரு தினங்களில் நடவடிக்கை


(அலுவலக செய்தியாளர்)

கிளி. நகரப் பகுதியில் சமாந்தரமாகப் பயணித்து வீதிப் போக்குவரத்திற்கு இடையூறு விளைவித்தார்கள் என்ற குற்றத்திற்காக கடந்த இரண்டு தினங்களில் கிளி. மாவட்ட நீதிமன்றில் 19 பேர் முற்படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த 22,23 ஆம் திகதிகளில் சனநெரிசல் மிகுந்திருந்த வேளையில் கிளிநொச்சி நகரப் பகுதியில் சமாந்தரமாகப் பயணித்து வீதிப் போக்குவரத்திற்கு இடையூறு விளைவித்தார்கள் என்ற குற்றத்தின் பேரில் தமிழீழ காவல்துறையின் வீதிப் போக்குவரத்துப் பிரிவினரால் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் மேற்படி 19 பேரும் முற்படுத்தப்பட்டனர்.

இவர்களை விசாரணை செய்த கிளி.மாவட்ட நீதிபதி பத்துப் பேருக்கு தலா நூறு ரூபா வீதம் தண்டப்பணம் செலுத்துமாறும் தீர்ப்பு வழங்கியதுடன் மற்றைய ஒன்பது பேரும் மாணவ மாணவிகள் என்பதால் இத்தகைய செயற்பாட்டில் ஈடுபடக்கூடாது எனவும் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த வீதிப் போக்குவரத்துப் பிரிவினர் போக்குவரத்திற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் சமாந்தரமாக பயணிப்பவர்கள் மீது தாம் தீவிர நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தமது மேற்படி நடவடிக்கை விபத்துக்களை தவிர்ப்பதற்காகவே மேற்கொள்ளப்படுகிறது எனவும் தமது இந்த நடவடிக்கைக்கு மாணவ மாணவிகள் மற்றும் பணியாளர்களே அதிக ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தனர். (லோ)





பாரிஸில் நடைபெறும் 9ஆவது உலக மெய்வல்லுநர் போட்டியின் ஆரம்ப நாளன்று "தட்டு" வடிவில் உருவமைக்கும் வாத்தியக் குழுவினரும், வேடிக்கை காட்டுவோரும் மற்றும் நடனக் குழுவினரையும் படங்களில் காண்க.

## முரளிதரனின் அணி வெற்றி

நோட்டிங்ஹாம்ஷையர் அணியுடனான 4 நாள் போட்டியில் முத்தையா முரளிதரனின் அபார பந்து வீச்சின் மூலம் கெண்ட் அணி 9 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.


முதலில் துடுப்பெடுத்தாடிய நோட்டிங்ஹாம்ஷையர் அணி 177 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கெண்ட் அணி 242 ஓட்டங்களைப் பெற்றது. முரளிதரன் 36 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளை வீழ்த்தி கெண்ட் அணியின் வெற்றிக்கு அத்திவாரமிட்டார்.

## சுசந்திகா வாய்ப்பை இழந்தார்

பிரான்சில் தலைநகர் பாரிஸில் இடம்பெறும் உலக மெய்வல்லுநர் சம்பியன் போட்டியில் மூன்றாம் சுற்றில் பங்குபற்றும் வாய்ப்பை சிறிலங்காவின் குறுந்தூர ஓட்ட சம்பியன் சுசந்திகா ஜெயசிங்க இழந்துள்ளார்.

இரண்டாவது சுற்றில் இவர் போட்டிக்கான தூரத்தை முழுமையாக ஓடி முடிக்காததால் அடுத்த சுற்றுக்கான தகுதியை இழந்துள்ளார்.

இதேவேளை சுகத்திலகரட்ன ஆண்களுக்கான 400 மீற்றர் போட்டியின் தகுதிகாண் போட்டியில் ஐந்தாவது இடத்தைப் பெற்ற அதேவேளை அடுத்த சுற்றுக்கான தகுதியையும் இழந்துள்ளார்.




## 3ஆம் நாளில் தென்னாபிரிக்கா 5-164

இங்கிலாந்து தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் நடைபெற்று வரும் 4வது டெஸ்ட் போட்டியின் 3வது நாளில் தென்னாபிரிக்க அணி அதன் இரண்டாவது இனிங்சில் 5 விக்கெட்டுக்களை இழந்து 164 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

தென்னாபிரிக்கா அதன் முதலாவது இனிங்சில் 342 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கிறிஸ்டன் 130 ஓட்டங்களையும் பொண்டகி 59 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்கு ஆடிய இங்கிலாந்து அணி தனது முதல் இனிங்சிற்காக 307 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் மார்க் பவுச்சர் 77 ஓட்டங்களையும், ரேஸ்கொத்திக் 59 ஓட்டங்களையும், பிரின்டொப் 55 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஐக்கலின் 38 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

# பொற்பதி கிராம மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு பரிகாரம் காண உதவவேண்டும்

## - மனித உரிமை ஆணைக்குழுவிடம் கஜேந்திரன்

பொற்பதி கிராம மக்கள் இராணுவத்தினரால் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கும், அடிப்படை மனித வுரிமை மீறல்களுக்கும் இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவினர் சகலமக்களாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு பரிகாரம் தேடிக்கொடுக்க வேண்டுமென சர்வதேச தமிழ் மாணவர் பேரவையின் தலைவர் கஜேந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார். அண்மையில் இப்பகுதியை நேரில் சென்று பார்வையிட்ட மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகப் பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடிய போதே இவர் இவ் வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சிறிலங்கா இராணுவத்தினர் தமது பாதுகாப்புக்காக யாழ்ப் பாணத்தை மையமாகக்கொண்டு படை முகாம்களை அமைத்து அப்பகுதி மக்கள் மீது மிகவும் அடாவடித்தனங்களைப் புரிந்து வருகின்றபோதும் இதனைத் தடுக்காது போர்நிறுத்தக் கண் காணிப்புக்குழுவினர் புறக்கணித்தும் வருகின்றனர்.

இதனால் பாதிக்கப்பட்டு நொந்துபோயுள்ள மக்களுக்கு நல்லதொரு திருப்தியை ஏற்படுத்தக்கூடிய வகையில் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவினர் செயற்பட வேண்டும் எனவும் இங்குள்ள இராணுவத்தின் மக்கள் மீதான அடாவடித்தனங்களை வெளியுலகுக்கு அம்பலப்படுத்துவதற்கு மனித உரிமைகள் ஆணைக் குழுவினர் உதவி செய்யவேண்டும் என்றும் கேட்டுள்ளார். (33)

# சமாதானத்துக்கு எதிரான சக்திகளை கண்டித்து திருமலையில் ஹர்த்தால்

சமாதானத்துக்கு எதிரான சக்திகளின் செயல்களைக் கண்டித்து திருகோணமலை மாவட்டத்தில் இன்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

பொங்குதமிழ் சமூகத்தினால் அழைப்பு விடப்பட்டு ஏற்பாடு செய்யப்பட்ட ஹர்த்தாலில் தமிழீழ விடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரநிதிகள் அவர்கள் கோரும் இடைக்கால நிர்வாக சபையே சமாதானப் பேச்சுத் தொடர ஒரே வழி என வலியுறுத்தப்படவுள்ளது. அத்துடன் சர்வதேச ஏகாதிபத்தியவாதிகளின் சதிவலையின் பின்னணியில் இயங்கி தமிழ் மக்களைக் கூறுபோடுவதன் மூலம் சமாதானத்தைக் குழப்புகின்ற சந்தர்ப்பவாத சக்திகளைக் கண்டித்தும் சமாதானச் சூழலைப் பயன்படுத்தி தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களில் அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்களைக் கண்டித்தும், இனங்களுக்கிடையேயான ஒற்றுமையைச் சீர்குலைக்கும் நோக்கில் அரசினால் திட்டமிடப்பட்டுள்ள கிழக்கு மாகாண ஆட்சேர்ப்பைக் கண்டித்தும்,

தமிழர்களின் தாயகமான வடக்கு-கிழக்கை பிரிக்கின்ற சந்திரிகா அம்மையாரின் சதி நடவடிக்கைகளைக் கண்டித்தும், படையினரால் மீண்டும் தமிழ்மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள அட்டூழியங்களைக் கண்டித்தும் இக்ஹர்த்தால் நடத்தப்படவுள்ளது.

# பெருநாள்

சிலாவத்தை புனித அன்னம்மாள் ஆலய பெருநாள் கடந்த 21ம் திகதி மாலை பங்குத்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் தலைமையில் ஆரம்ப மானது. இறுதிநாள் திருநாள் எதிர்வரும் 30-ஆம் திகதி நடைபெறுமென ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (20)

# மருத்துவபீடப் பரீட்சையில் சித்திபெற்றோருக்கு தமிழீழ சுகாதார சேவையினர் வாழ்த்து

(அலுவலக செய்தியாளர்)

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தினால் கடந்த யூன் மாதம் நடத்தப்பட்ட எம்.பி.பி.எஸ் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்குத் தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழர் தாயகப் பகுதிகளில் வைத்தியர்களின் பற்றாக்குறையினால் மக்கள் பெரிதும் சிரமப்படுகின்றனர். இதனை நாம் அனைவரும் அறிவோம்.

சிறிலங்கா அரசும் திட்டமிட்டு தமிழ் வைத்தியர்களை தமிழர் பகுதிகளுக்கு அனுப்புவதில் தொடர்ந்தும் புறக்கணிப்புச் செய்து வருகின்றது. எனவே இளைய தமிழ் மருத்துவர் சமூகத்தினர் பாதிக்கப்பட்ட எமது பகுதி மக்களுக்கு சேவையாற்ற முன்வரவேண்டும் எனவும் வேண்டுகை விடுத்தார். (சோ)

# திருமலை பிறிமா மா ஆலை ஊழியர்கள் மீது பொலிசார் தடியடி, கண்ணீர்ப் புகை வீச்சு

## பன்னிரண்டு ஊழியர்கள் காயம்

திருமலை பிறிமா மா ஆலையின் முன் பொலிசார் மேற்கொண்ட தடியடி கண்ணீர்ப் புகைக்குண்டுப் பிரயோகத்தில் பன்னிரண்டு பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் காலை ஏழு மணியளவில் இச்சம்வம் இடம் பெற்றது.

திருகோணமலை பிறிமா மா ஆலையில் நிரந்தரமில்லாத ஊழியரை நிரந்தரமாக்குமாறு அங்கு நிரந்தரமாகக் கடமையாற்றும் பெரும்பான்மை இனத்தவர் ஒருவர் நிர்வாகத்தைக் கோரியிருந்தார். இவரது கோரிக்கையை ஏற்காத நிர்வாகம் அவரைக் கொழும்பிற்கு இடம் மாற்றியது. இதனைக் கேள்வியுற்ற நிரந்தரமற்ற ஊழியர் கள், நேற்று முன்தினம் காலை பிறிமா மா ஆலையின் பிரதான வாயிலின் முன் ஆர்ப்பாட்டம் செய்த துடன் எவரையும் உட்செல்லவும் அனுமதிக்கவில்லை.

இவ்விடயத்தை நிர்வாகத்தினர் பொலிசாருக்குத் தெரிவிக் கவே பொலிசார் வந்து ஆர்ப்பாட்டக் காரரைக் கலைந்து செல்லுமாறு கூறியபோதும், அவர்கள் செல்லாத காரணத்தால் அவர்கள் மீது தடியடி கண்ணீர்ப் புகைக்குண்டுப் பிரயோகம் மேற்கொண்டனர். இதில் பன்னிரண்டு பேர் படுகாயமடைந்ததுடன் அவ்விடத்திலேயே இருவர் மயக்கமாகி விழுந்தனர்.

இதேவேளை பிறிமா மா ஆலையில் நிரந்தரமாக பணிபுரியும் ஐம்பது வீதமானோர் நிரந்தரமில்லாத ஊழியர்களை நிரந்தரமாக்குவற்கு ஆதரவு தெரிவித்தனர்.

# சமாதான காலத்திலும் கடற்படையினர் ஆயத்த நிலையிலேயே இருக்க வேண்டும்

## - சிறில.பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன

சமாதானம் என்றாலும் சரி யுத்த காலம் என்றாலும்சரி எப்பொழுதும் கடற்படையினர் ஆயத்த நிலையிலேயே இருக்க வேண்டுமென சிறிலங்காப் பாதுகாப்பமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

திருகோணமலையிலுள்ள கடற்படைப் பயிற்சிக் கல்லூரியில் 61 அதிகாரிகளும், 40 சிப்பாய்களும் பயிற்சி முடித்து வெளியேறும் நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பாதுகாப்பமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் முக்கியமாக கடற்படையினர் எப்பொழுதும் ஒழுங்கைக் கடைப்பிடிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இந்த நிகழ்வில் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயாசந்தகிரி மற்றும் கடற்படை உயர் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டுள்ளனர்.

# - திருமலை, வவு.,மன்னார் பகுதிகளில் -

## சிங்கள மக்களை குடியேற்றும் நடவடிக்கைகள் தீவிரம்

தமிழர் தாயகப் பகுதிகளில் மீளக் குடியேற்றங்களைத் தடைசெய்து வரும் சிறிலங்கா அரசு இப்பகுதிகளில் பல சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டுவருகின்றது.

திருகோணமலை, திரியாய்ப் பகுதியிலும், ஆண்டான்குளம் கிராமத்திலும் சிங்கள மக்களைக் குடியேற்றுவதற்காக பல கிராமங்களை அமைத்து வருவதுடன் திருகோணமலை மாவட்டத்தில் விளாங்குளம் பகுதியில் பௌத்தபிக்கு ஒருவரின் தலைமையில் பௌத்த விகாரை ஒன்று அமைக்கப்பட்டும் வருகின்றது. இதேபோன்று கந்தளாய் சீனித் தொழிற்சாலை அமைந்துள்ள பகுதிகளிலும் சின்னத் தொடுவாய் சித்திவிநாயகர் ஆலயப் பகுதிகளிலும் இவ்வாறு சிங்கள மக்கள் குடியமர்த்தப்பட்டுள்ளதுடன் இவர்களுக்குப் புதிய குடியேற்றத்திட்டங்களும் உருவாக்கப்பட்டுள்ளது.

வவுனியா, மன்னார் எல்லைப்புற கிராமங்களிலும் சிங்கள மக்களை மீளக்குடியேற்றும் நடவடிக்கைகள் தொடர்ந்து வருகின்றன.

இதற்காக வவுனியாக் கொக்குவெளிக்கிராமத்தில் அமைந்திருந்த சிறிலங்காப்படையினரின் உயர்பாதுகாப்பு வலயம் பின்நகர்த்தப்பட்டு அங்கு சிங்கள மக்களைக் குடியமர்த்தும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் நடந்துவருகின்றன. இதற்கென கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு புதிய வீதிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

# கோயிலாக்கண்டி மீனவர்களை விளக்குகளை படகுகளில் பகலிலும் ஒளிரவிட உத்தரவு

(யாழ்ப்பணம்)

கோயிலாக்கண்டி கடற்பிரதேசத்தில் தொழிலில் ஈடுபடும் மீனவர்களின் பகல் வேளைகளிலும் வள்ளங்களில் விளக்குகள் ஒளிரவிடப்பட வேண்டுமென சிறிலங்கா இராணுவப் படையதிகாரி மேஜர் பலாங்கொட உத்தரவிட்டுள்ளார்.

இதுவரை காலமும் இப்பகுதிக் கடலில் இரவு வேளைகளில் மீன்பிடிக்கத் தடை விதித்திருந்தனர். இந்த நிலையைச் சுட்டிக்காட்டி இப்பகுதி மக்கள் படை அதிகாரிகளைச் சந்தித்து இந்த நெருக்கடி நிலை தொடருமானால் வெகுசன எதிர்ப்புப் போராட்டங்களை நடத்துவோம் என எச்சரித்தனர்.

இதனைத் தொடர்ந்து இப்பகுதிக் கடலில் இரவுவேளைகளில் தொழிலில் ஈடுபட அனுமதித்திருந்தனர். ஆனால் இப்பொழுது எந்தவித காரணத்துக்காகவும் இரவு வேளைகளில் தொழிலில் ஈடுபடக் கூடாது என்றும் கண்டிப்பாக அனுமதி அட்டைகள் வைத்திருக்க வேண்டும் எனவும் எச்சரித்துள்ளனர்.

அத்துடன் கோயிலாக் கண்டி மீனவர்கள் என்று தம்மை இனங்காட்டிக் கொள்வதற்காகவே இவ்வாறு படையினர் படகுகளில் பகலிலும் விளக்குகள் எரியவிட வேண்டும் என எச்சரித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

## வடக்கு..

சுட்டிக்காட்டியுள்ளார்.

மாகாணசபைத் தேர்தல் சட்டம், உள்ளூராட்சி சபைச்சட்டம் ஆகிய இரண்டும் திருத்தப்பட வேண்டும் என்று தேர்தல் ஆணையாளர் அமைச்சர் அலுவிகாரவிடம் தெரிவித்துள்ளார். தற்போதைய அமைதிச் சூழல் நிலவுவதால் வடக்குக் கிழக்கில் இத்தகைய தேர்தல் ஒன்றை நடத்த முடியும் என்று அமைச்சர் கூறியுள்ளார். வடக்குக்கிழக்கு மாகாணசபை 1990 ஆம் ஆண்டு யூலை மாதம் கலைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஆறு..

நியமனப்பத்திரங்களைக் கோருவேன் என மத்திய மாகாண சபையின் முதலமைச்சர் வசந்த அலுவிகார கூறியுள்ளார்.

இதேவேளை, அரசியல் கட்சிகளும் மாகாணசபைத் தேர்தல்களை எதிர்கொள்வதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டு வருகின்றன.

கடந்த வாரம் ஐக்கியதேசியக் கட்சி பொருத்தமான வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் நோக்கில் கட்சித் தலைமையகத்தினால் விண்ணப்பங்களைப் பெற்று வருகிறது. இந்நிலையில் பொதுசன ஐக்கிய முன்னணி முன்னாள் பிரதமர் ரட்ண சிறி விக்கிரம நாயக்க தலைமையில் உறுப்பினர்களைத் தேர்தலுக்குத் தயார்ப்படுத்தும் நோக்கில் குழு ஒன்றை நியமித்துள்ளது.

ஜே.வி.பி.கிராமம் கிராமமாகச் சென்று ஆயிரம் கூட்டங்களை நடத்தும் பிரச்சார நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. இதன் போது தற்போது அரசியல் சூழல் குறித்தும் சமாதான முயற்சிகள் குறித்தும் புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பது குறித்தும் பரப்புரை செய்து வருகின்றது.

# 36 இந்திய மீனவர்கள் யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைப்பு

மொத்தம் 36 இந்திய மீனவர்கள் இப்பொழுது யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை வட்டாரங்கள் கூறியுள்ளன. இவர்களில் நால்வர் மீது மட்டும் யாழ்.உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் ஏனையோர் மீது வழக்கெதுவும் இதுவரை பதிவு செய்யப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.குடாநாட்டுக் கடற்பரப்பில் அத்துமீறி மின்பிடிக்க நுழைந்தவர்களில் படகோட்டிகளாக இருந்தோரே இவ்வாறு கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் ஏனையோர் உடனுக்குடன் கரையோரக் காவல்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டு விடுவதாகவும் சிறிலங்கா கடற்படை வட்டாரங்கள் கூறியுள்ளன.

## கூட்டு..

யில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தின் போது கட்சிச் செயலர் மைத்திரிபால சிறிசேன, ஜே.வி.பி. செயலர் டில்வின் சில்வா, பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச ஆகியோர் பங்குபற்றுகின்றனர்.

இச்சந்திப்பின் போது அரசு-புலிகள் ஒப்பந்தம், நோர்வே தலையீடு பற்றி முடிவெடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பொங்கு...

கலந்து கொள்ளக் கூடாது என்று எச்சரிக்கையுடன் கூடிய கடிதமொன்றும் வவுனியாப் பொங்கு தமிழ் ஏற்பாட்டுக் குழுவினருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பொங்கு தமிழ் ஏற்பாட்டு நிகழ்வில் கலந்து கொண்ட அரச ஊழியர்களிடம் இராணுவம் விளக்கக் கடிதம் கோரியிருந்தமை தெரிந்ததே.

## மாவீரன்..

பெருந்திரளான மக்கள் பார்வையிட்டுவரு கின்றனர். நேற்று 4வது நாளான கண்காட்சி தினநிகழ்வை காலை முதல் மாலை வரை மாணவர்கள் முதல் முதியோர்கள் வரை பெருந்திரளான மக்கள் பார்வையிட்டுச் சென்றமை குறிப்பிடத்தக்கது.(சோ)

# வட,கிழக்கை பிரிப்பதற்கு பொ.ஐ.மு.விற்குள் எதிர்ப்பு

இணைந்த வடக்கு, கிழக்கு மாகாணத்தைப் பிரிப்பதற்கு பொதுசன ஐக்கிய முன்னணியின் தலைவியும், சனாதிபதியுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆராய்ந்து வருவதாகத் தெரிவித்து வரும் தகவல்கள் குறித்து பொதுசன ஐக்கிய முன்னணியிலுள்ள சில கட்சிகள் எதிர்ப்பினையும், ஆட்சேபனைகளையும் தெரிவித்திருக்கின்றன. நாட்டின் ஒட்டுமொத்த தேசிய நலனுக்கு மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் ஏராளமானவையாக இருக்கும் இப்போதைய நிலையில் சிறிதளவும் தேவையற்ற ஒரு விடயத்திற்காக சனாதிபதி ஆராய்வுகளை மேற்கொண்டு வருவது அர்த்தமற்றதென்பதே இவற்றின் அபிப்பிராயமாக உள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணப் பிரிப்பு செயற்பாடென்பது எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றெனத் தெரிவித்திருக்கும் தேசிய ஐக்கிய முன்னணியின் சிரேஷ்ட பிரதித் தலைவர் எம்.எல்.ஏ ஹிஸ்புல்லா மாகாணப் பிரிப்பென்பது மீண்டுமொரு யுத்தத்திற்குச்செல்வதனையே அர்த்தப்படுத்துமெனக் கூறினார்.

# வைத்தியசாலைக்கு அன்பளிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் கட்டம்-1 வைத்தியசாலைக்கு முல்லைத்தீவு வர்த்தகர்கள் பிளாஸ்ரிக் கதிரைகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். இதன் மூலம் அவ் வைத்தியசாலையின் தளபாடக் குறை ஓரளவு நீங்கும் என வர்த்தக சங்கத் தலைவர் செ. உதயகுமார் தெரிவித்தார். இக்கதிரைகளை யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் சேகரித்து வழங்கினர். (20)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.